# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:14 வள்ளுவர் ஆண்டு 2029 கார்த்திகை 24 வியாழக்கிழமை (10-12-1998) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:12


## கொழும்பு மாநகரசபை உறுப்பினர் மருதானையில் சுட்டுக் கொலை!

### 'ஹைஏஸ்' வாகனத்தில் வந்தோர் கைவரிசை

கொழும்பு, டிசெ. 10

கொழும்பு மாநகரசபையின் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி உறுப்பினரானமொகமட் இம்தியாஸ் நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் மருதானையில் வைத்து 'ஹைஏஸ்' வாகனத்தில் வந்த இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இவருடன் சென்ற மற்றொருவர் காயமடைந்த நிலையில் கொழும்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்,

மாளிகாவத்தையில் இயங்கும் ஜிகாத் அமைப்பின் தலைவராக பணியாற்றி வருபவராகக் கூறப்படும் இம்தியாஸ் அண்மையில் 15 கொலைகள் தொடர்பாக தேடப்பட்டு வந்தவர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

(இ-3-6-21)

## சுமார் ஆயிரம் பேர் நகரில் இடம் பெயர்வு

### மழையால் பெரும் வெள்ளம்

யாழ்ப்பாணம், டிசெ. 10

யாழ். குடாநாட்டில் கடந்த சில தினங்களாகத் தொடர்ந்து பெய்து வரும் மழையினால் ஏற்பட்டுள்ள வெள்ள நிலைமை காரணமாக தாழ்வான பகுதிகளில் இருந்துசுமார் ஆயிரம்பொது மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர்.

யாழ். ஆரியகுளம் வெள்ளத்தினால் நிரம்பி வழிவதை அடுத்து குளத்தின் கிழக்கு மற்றும் தென் கிழக்குப் பகுதிகளில் வசிக்கும் சுமார் நூறு குடும்பங்கள் இடம் பெயர்ந்துள்ளன. இடம் பெயர்ந்தவர்களில் சிலர் றக்கா வீதியில் உள்ள தனியார் கல்வி நிலையத்தில் தஞ்சமடைந்துள்ளனர்.

இராசாவின்தோட்டம் பகுதிகளில் உள்ள சுமார் இரு

(10 ஆம் பக்கம் பார்க்க)

# மனித உரிமைகள் தினமான இன்று வடக்கு - கிழக்கில் எதிர்ப்பு இயக்கம்!

## தமிழ்க் கட்சிகள் அமைப்புகள் ஏற்பாடு

யாழ்ப்பாணம். டிசெம்பர் 10

**ஐ. நா. மனித உரிமைகள் பிரகடனத்தின் ஐம்பதாவது ஆண்டு நிறைவு தினமான இன்று ஸ்ரீலங்கா அரசின் மனித உரிமைகள் மீறல்களைக் கண்டித்து வடக்கு — கிழக்கில் தமிழ்க் கட்சிகளும், பொது அமைப்புக்களும் எதிர்ப்புப் போராட்டங்களை ஏற்பாடு செய்துள்ளன.**

நல்லூர் கந்தசுவாமி கோயிலுக்கு பின் வீதியில் அமைக்கப்படும் விசேட கொட்டகையில் ஈ. பி. டி. பி. அமைப்பு ஏற்பாடு செய்துள்ள உண்ணாவிரதம் காலை 9 மணிக்கு ஆரம்பித்து மாலை 4 மணிக்கு பூர்த்தி அடையும்.

ஈ. பி. டி. பி. அமைப்பின் உறுப்பினர்களுடன் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள்

(10ஆம் பக்கம் பார்க்க)



நியமனங்களில் மட்டும் குறைச்சல் இல்லை. காரியம் எதுவும் நடக்குது இல்லையே ...!

## கிளாலிச் சம்பவம் குறித்து கட்டளை தளபதி வருத்தம்

யாழ்ப்பாணம், டிசெ. 10

கிளாலி காணிக்கை மாதா கோயிலடியில் கடந்த திங்கட்கிழமை இரவு இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் குறித்து வடபிராந்திய கட்டளை தளபதியான மேஜர் ஜெனரல் லொஹான் குணவர்த்தனா வருத்தம் தெரிவித்து அறிக்கை வெளியிட்டுள்ளார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## 7பேரைக் கொன்றவருக்கு புலிகள் மரண தண்டனை

மட்டக்களப்பு, டிசெ.10

மட்டக்களப்பு மாவட்டத்தில் செங்கலடியில் மாமன், மாமி உட்பட ஏழு பேரைச் சுட்டுப் படுகொலை செய்தவருக்கு விடுதலைப் புலிகள் அமைப்பினால் மரண தண்டனை வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 5 ஆம் திகதி துப்பாக்கியுடன் சென்ற அந்த நபர் வீட்டில் இருந்த தமது மாமன், மாமி, மைத்துனர் உட்பட ஏழு பேரைச் சுட்டுப் படுகொலை செய்ததும்—

அங்கிருந்த தமது மனைவி,

(10 ஆம் பக்கம் பார்க்க)

# வர்த்தக சம்மேளன குழுவுக்கு ஐ.தே.க. நால்வரை நியமித்தது!

இனப்பிரச்சினைக்கான தீர்வைக்காண முன் முயற்சிகளில் ஈடுபட்டுள்ள வர்த்தக சம்மேளனத்தின் சமாதானக் குழுவுக்கு நால்வரை ஐ.தே.க. நியமித்துள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்களான ஏ.ஸி.எஸ்.ஹமீட், றொனி டி மெல், கே.என்.சொக்ஸி மற்றும் மத்தியகுழு உறுப்பினரான டி.எம். சுவாமிநாதன் ஆகியோரையே ஐ.தே.க நியமித்துள்ளது.

சமாதான முன் முயற்சிகளுக்கு தமது கட்சி பூரண ஆதரவு வழங்கத்தயாராகவிருப்பதாகவும்—

பிரிட்டிஷ் முன்னாள் பிரதி வெளிவிவகார அமைச்சர் லியம் பொக்ஸின் உடன்படிக்கையின் பிரகாரம் இந்த முயற்சிக்கு ஆதரவு தருவதாகவும்—ஐ.தே.க.தலைவர் ரணில் விக்கிரமசிங்க வர்த்தக சம்மேளனத் தலைவர் லலித் கொத்தலாவலவுக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

இந்த சமாதானக் குழுவுக்கு பொதுமக்கள் ஐக்கிய முன்னணி ஏற்கனவே நால்வரின் பெயர் விவரங்களை அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(இ-3-21)

## மின்கம்பங்கள் தகர்ப்பு

மட்டக்களப்பு, டிசெ. 10

மட்டக்களப்பு வெல்லாவெளியில் நேற்று முன்தினம் இரவு எட்டு மின்கம்பங்கள் இனந்தெரியாத நபர்களினால் தகர்க்கப்பட்டன.

இச்சம்பவம் குறித்து மின்சார சபையினால் வெல்லாவெளி பொலீஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

(இ-21)

## லயன் ஏயர் விவகாரம் ஜன. 4க்கு ஒத்திவைப்பு

இரணைதீவுக் கடலில் வீழ்ந்ததாகக் கருதப்படும் 'லயன் ஏயர் விமானத்தில் பயணம்செய்தவர்கள்தொடர்பாக மரண விசாரணை நடத்தி மரணச்சான்றிதழ் வழங்குவது தொடர்பான தீர்ப்பு வழங்குவதை அடுத்த மாதம் 4 ஆம் திகதிக்கு மன்னார் நீதிவான் ஏ. இளஞ்செழியன் ஒத்தி வைத்தார்.

இது தொடர்பாக மன்னார் பொலீஸார் தாக்கல் செய்த விண்ணப்பம் தொடர்பான தீர்ப்பை நேற்று வழங்குவதாக மன்னார் நீதிவான் முன்னர் அறிவித்திருந்தமை தெரிந்ததே.

(இ-3-21)

## மட்டக்களப்பில் கிரனேட் வீச்சு

மட்டக்களப்பு பாலமீன் மடுவில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற கிரனேட் வீச்சுச் சம்பவமொன்றில் பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவர் காயமடைந்தார்.

இச்சம்பவத்தில் அகப்பட்டு காயமடைந்த இளைஞர் ஒருவர் மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(இ-21)

## விறகு வெட்டச் சென்ற அறுவர் சுட்டுக்கொலை!

### புனானைக் காட்டில் சம்பவம்

மட்டக்களப்பு, டிசெ. 10

மட்டக்களப்பு ஒட்டமாவடி வாசிகள் ஆறுபேர் இனந்தெரியாத ஆயுதபாணிகளால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

புனானைக் காட்டில் விறகு வெட்டச் சென்ற சமயம் இச் சம்பவம் இடம்பெற்றது.

நேற்று முன்தினம் இரவு அப்பிரதேசத்தில் நடமாடிய

(10 ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாவகச்சேரி பிரதேச சபை

# அறிவித்தல்

07 – 12 – 98 ஆம் திகதிய உதயன் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கொடிகாமம் நவீன மரக்கறிச் சந்தைக்கான கேள்வி 07 - 12 - 98 ஆம் திகதியவிசேட கூட்டத்தின் தீர்மானத்திற்கமைவாக பின்போடப்படு கின்றது என்பதை தயவுடன் அறியத்தருகின்றேன்.

வே. அருணந்தி
செயலாளர்
சாவகச்சேரி பிரதேச சபை.

(சி/5766)

---

யாழ்ப்பாணம் வணிகர் கழகம்

## சகல அங்கத்தவர்களுக்குமான பணிவான வேண்டுகோள்

நல்லூர் கந்தசாமி கோயில்முன்றலில் 10–12–98இல் இலங்கையில் மனித உரிமைகள் மீறப்படுவதை வலியுறுத்தும் வகையில் நடைபெறும் அடையாள உண்ணா விரதத்தில் எமது அங்கத்தவர்கள் கலந்து கொண்டு மனித உரிமைகள் மீறப்படுவதை வெளிப்படுத்தும் வண்ணம் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

யாழ்ப்பாணம் வணிகர் கழகம்

இல. 27, நவீன சந்தை (மேல்மாடி),
யாழ்ப்பாணம்.

(சி/5764)

---

## இலங்கை மின்சார சபை

சுன்னாகம்.

மத்திய மின் நிலையத்தைச் சூழவுள்ள பிரதேசத்தை

## மாதாந்தம் துப்புரவு செய்தல்

மேற்படி பிரதேசத்தில் வளர்ந்துள்ள புல் பூண்டுகளையும் பற்றைகளையும் மாகாந்தம் அகற்றித் துப்புரவு செய்வதற்கு **1 – 1 – 99** இலிருந்து ஒரு வருடத்துக்கு கூறுவிலைகள் கோரப்படுகின்றன.

மேற்படி வேலையைச் செய்வதற்கு விரும்புவோர் குறிக்கப்பட்ட பிரதேசத்தை **14 — 12 — 98** அன்று காலை 8.00 மணிமுதல் மாலை 4.15 வரை பார்வை இட்டு தங்கள் முத்திரையிடப்பட்ட கூறுவிலையை பதிவுத் தபால் மூலம் **16 — 12 — 98** காலை 10.30 மணிக்கு முன்னதாகப் பிரதிப் பொதுமுகாமையாளர் (வடமாகாணம்), இலங்கை மின்சார சபை, 536/1, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்புதல் வேண்டும்.

பிந்திக் கிடைக்கும் விண்ணப்பங்களும் நேரடியாகச் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்களும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. மேலதிக விவரங்களையும் பார்வையிடுவதற்கேற்ற அனுமதியையும் சுன்னாகம் மத்திய மின் நிலைய மின் பொறியியலாளரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

பிரதிப் பொதுமுகாமையாளர்.
(வடமாகாணம்)

இலங்கை மின்சார சபை,
536/1, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
09- 12- 1998

(சி/5760)

---

யாழ். மாவட்ட
விவசாய உற்பத்தி சந்தைப்படுத்தல் நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்
(வரையுள்ளது)

## சேதமடைந்த பொருள்கள் விற்பனை

பின்வரும் சேதமடைந்த பொருள்கள் கூறுவிலை மூலம் விற்பனை செய்யப்படவுள்ளன.

இவற்றைக் கொள்வனவு செய்ய விரும்புவோர், சமாசக் களஞ்சியத்தில் பார்வையிட்டுத் தமது கூறுவிலையை 18–12–98 ஆம் திகதி வெள்ளிக்கிழமையோ அதற்கு முன்போ சமர்ப்பிக்க வேண்டும்.

பெற்றோமக்ஸ் விளக்குகள்
லொறி ரியூப் (900 x 20)
லீற்றர் கான்கள்
வெற்று மரப்பெட்டி
சுவீப்பிங் தானிய வகை
பால்மா வகை
பலகைத் துண்டுகள்

பொது முகாமையாளர்
யா.மா.வி.உ.ச.நு.கூ.ச. சமாசம்

111, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
09.12.98

(சி/5762)

---

## ஒளி விழா

தென்மராட்சி, டிசெ. 10

முகமாலை றோமன் கத்தோலிக்க பாடசாலை மாணவர்களின் ஒளிவிழா நாளை மறுதினம் சனிக்கிழமை பாடசாலை மண்டபத்தில் அதிபர் அ. ஞானசோதி தலைமையில் நடைபெறும். (இ-117)

---

**லிபேட்டி**
**தியேட்டர்**
அச்சுவேலி.
தற்போது
காண்பிக்கப்படுகிறது
**சரத்குமார் - குஷ்பு**
நடித்த
**சிம்மராசி**
தினசரி: 10-30, 2-30
( பழைய நேரம் )
அடுத்த வெளியீடு!
**புதுமைப்பித்தன்**
தொலைபேசி:
**070 - 212223**
(61225)

---

**நாகம்ஸ்**
சினிமா
சுன்னாகம்.
30 அடி அகலத் திரையில்
இன்று மட்டும்
**அர்ஜுன் - தபு**
நடித்த
**தாயின் மணிக்கொடி**
( CD பிரதி )
காட்சிகள் - 10 30-2.30
நாளை முதல்
மீண்டும், கூட்டுத்தாபன
ரீல்ஸ் வெளியீடு!
குதூகல ஆரம்பம்
**காதல் கோட்டை**
(61222)

---

**ராஜா**
**டாக்கீஸ்**
யாழ்ப்பாணம்.
**ரஜனி, மீனா, ரோஜா**
**ஜனகராஜ், செந்தில்**
நடித்த
**வீரா**
தினசரி
10-30, 2-00, 5-00
(சி/5711)

---

**றீகல்** டாக்கீஸ்
ஈச்சமோட்டை.
**10-30** மணிக்கு
**பிரகாஸ்ராஜ் - குஷ்பு**
நடித்த
**குரு பார்வை**
**2-30** மணிக்கு
**அஜித் - தேவயானி**
நடித்த
**உயிரோடு உயிராக**
(பழைய நேரம்)
(61235)

---

எமது புதிய தரமான
வெளியீடுகள்!

**அஜித்குமாரின்**
❀ உயிரோடு உயிராக

**பிரகாஸ்ராஜின்**
❀ குரு பார்வை

◆ ஒவ்வொரு புதுப் பட பிரதிகளும் 300/-

★ புதிய படப் போஸ்ரர்களும்விற்பனைக்குண்டு.

**பிள்ளையார்**
**வீடியோ**
23, [illegible] வீதி,
யாழ்ப்பாணம்.
(61237)

---

## சடலங்கள் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 10

கிளாலியில் கடந்த திங்கட்கிழமைஇரவுஇடம்பெற்றதுப்டாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் உயிரிழந்து யாழ் ஆஸ்பத்திரியில் பளை பொலீஸாரால் ஒப்படைக்கப்பட்ட இரு சகோதரர்களினதும் சடலங்கள் நேற்று நடைபெற்ற மரணவிசாரணையையடுத்து பெற்றோரிடம் கையளிக்கப்பட்டன.

அமிர்தநாதன் அமிர்தரதன் (வயது 15), அவரது சகோதரரான அமில்டன் (வயது 3 மாதம்) ஆகிய இருவருமே மரணமானவர்கள் ஆவர். (இ-15-139)

---

# மரண அறிவித்தல்கள்

## ம. கந்தையா அம்பலவாணி

(நடராசா)

(சரவணை - வேலணை)

சரவணை கிழக்கைப் பிறப்பிடமாகவும் தற்போது வவுனியாவில் வசித்தவருமான ம. கந்தையா அம்பலவாணி 04 – 12 – 98 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா விசாலாட்சியின் அன்பு மகனும், கமலேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற நல்லைதம்பி இராசம்மாவின் அன்பு மருமகனும், காலஞ்சென்றவர்களான தங்கம்மா, சுப்பிரமணியம் (நொத்தாரிசு), இராசம்மா, நல்லையா (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரனும், பவானி, மாலினி, திருவேரகன் (ஜேர்மனி), கலைவாணி, ருபரன் (ஜேர்மனி), இளந்திரையன் (வவுனியா), ஜெயவாணி ஆகியோரின் அன்புத் தந்தையும், சுதாகரன் (மல்லாவி), கிருபாநந்தன் (மல்லாவி) ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்ற தம்பாப்பிள்ளை, நாகேஸ்வரி, பாலசரஸ்வதி, நாகேஸ்வரி, துரைராசா, போசராசா, காலஞ்சென்ற விஜயலட்சுமி, இராஜேஸ்வரி (ஜேர்மனி), சுதாமதி (ஜேர்மனி), வரதராஜா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற சண்முகராஜா, புனிதவதி, இராஜேஸ்வரி, மாணிக்கவாசகர் (ஜேர்மனி), நாகேஸ்வரன் (ஜேர்மனி), பபா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகலனும், கேசிகன், கீர்த்திகன், விதுஷன், லக்ஷிகா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 04-12-98 அன்று வவுனியாவில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
திருமதி நா. சுப்பிரமணியம் (மைத்துனி)
83/19, அரசடி வீதி,
தஞ்சி ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

மகன்: அ. இளந்திரையன்
இல. 12, குருமன்காடு,
வவுனியா.
TP 024 - 22179

(சி/5761)

---

## திருமதி ஜெயம் பரிமளம்

(கல்யாணி)

கண்டி வீதி பளையை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி ஜெயம் பரிமளம் 7–12–98 அன்று பளையில் காலமாகி விட்டார்.

அன்னார் வல்லிக்குட்டி -ஜெயம் அவர்களின் அன்பு மனைவியும் நல்லன்–நல்லம்மா ஆகியோரின் அருமை மகளும் ஜெயந்தி (சுவிஸ்), சுகந்தி, ஜெயந்தன் (ஜேர்மனி), வசந்தி (விசுவமடு), சுமிதா ஆகியோரின் அருமைத்தாயாரும் ஜெயபாலன் (ஜேர்மனி), ஜெயக்குமார், நேசன் (வவுனியா), றஜனி (சுவிஸ்), இராகினி (இந்தியா), வினினோ (வன்னி), ஜெயந்தினி ஆகியோரின் சிறியதாயாரும் காலஞ்சென்ற திருமதி ஜெகசோதி அவர்களின் அன்புச் சகோதரியும், கணேஸ் (கொழும்பு), தங்கவடிவ்வேல் (கொழும்பு), பிள்ளையார் (நெல்லியடி), பூவன் குடும்பம் ஆகியோரின் அருமைச் சகோதரியும் ஸ்ரீஸ்வரலிங்கம் (சுவிஸ்), தவஞானம், சுகந்தகுமார் ஆகியோரின் அன்பு மாமியாரும் சியானா, டனக்சாந் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை 8–12–98 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெற்றது என்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

தகவல்:
ஜெயம்
(கணவன்)

பளை நகரம்,
பளை.

(61230)

---

## சிதம்பரப்பிள்ளை அருச்சுனன்

காரைநகர் ஆலடியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் திருநெல்வேலி ஆடியபாதம் வீதியில் வசித்தவருமாகிய சிதம்பரப்பிள்ளை அருச்சுனன் 09–12–98 நேற்று புதன்கிழமை காலமானார்.

அன்னார் மகேசுவரியின் அன்புக் கணவரும் சோமசுந்தரம், சண்முகநாதன், சிவராசா, சாரதாதேவி ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் புவனேசுவரியின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள்இன்று (10-12-98) வியாழக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெற்று பூதவுடல் திருநெல்வேலி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
அ. சண்முகநாதன்
(மகன்)

ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி.

(61236)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகல தமிழ்ப்பாடசாலைகளில் தமிழ்மொழி மூல நிர்வாகம்

## மாகாணக் கல்வி அமைச்சு பணிப்பு

திருகோணமலை, டிசெ. 10 வடக்கு - கிழக்கு கல்வி, சுகாதார விளையாட்டுத் துறை அமைச்சு தனது அமைச்சின் கீழ் உள்ள அலுவலகங்கள், பாடசாலைகளில் தமிழ்மொழி மூலம் நிர்வாகத்தை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளது.

அடுத்தமாதம் நடைமுறைக்குவரவுள்ள இத்திட்டத்தின்கீழ் சகலதமிழ்ப்பாடசாலைகளிலும் தமிழ்மொழி மூல நிர்வாகமும் —

மாகாணத்தில் உள்ள சிங்களப்பகுதிகளில் உள்ள அலுவலகங்கள், பாடசாலைகளில் சிங்கள மொழி மூல நிர்வாகமும் — மேற்கொள்ளப்படும் என்று மாகாணக் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

தமிழ்மொழி மூலம் பணிகளை நடைமுறைப்படுத்துவதில் ஏதாவது இடர்ப்பாடுகள் இருந்தால் சம்பந்தப்பட்டோர் மாகாணக் கல்வி அமைச்சுடன் தொடர்பு கொள்ளுமாறும் கோரப்பட்டுள்ளது, (ஐ-3-10)

# எம். ஜி. ஆர். நினைவு நாள் கொண்டாட ஏற்பாடு

யாழ்ப்பாணம், டிசெ. 10 மக்கள்திலகம் எம். ஜி. ஆரின் பதினொராவது ஆண்டு நினைவுநாளை எதிர்வரும் 24 ஆம் திகதி முதல் மூன்று நாள்களுக்கு மாபெரும் விழாவைக் கொண்டாட அனைத்துலக எம். ஜி. ஆர். பேரவையும், எம். ஜி. ஆர். முன்னேற்றக்கழகமும் இணைந்து ஏற்பாடு செய்துள்ளன.

இந்த விழாவை யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கு வடபகுதிக்கான கட்டளை அதிகாரியிடம் அனுமதி கோரியுள்ளதாகவும்—

நிகழ்வுகள் நடைபெறும் தினங்களில் ஊரடங்கைத் தளர்த்த ஏற்பாடு செய்யுமாறு கோரியுள்ளதாகவும்— அந்த அமைப்புப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

நினைவுப்பேருரை, அறிஞர்களின் சிறப்புரைகள். கலை நிகழ்வுகள் ஆகியன ஏற்பாடு செய்யப்படுவதாக அனைத்துலக எம். ஜி. ஆர். பேரவைத் தலைவர் பொன். மதிமுகராசா தெரிவித்தார். (ஐ-3)

## யாழ். மாநகரசபைப் பகுதி

# வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி ஏற்ற ஏற்பாடு

யாழ்ப்பாணம், டிசெ. 10 யாழ். மாநகர சபைப் பிரிவில் வளர்ப்பு நாய்களுக்கு விசர்நோய்த் தடுப்பு ஊசி மருந்து போடும் பணிகள் எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாக மாநகர சுகாதார வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார்.

தடுப்பு மருந்து போடப்படும் திகதி, நேரம், இடம் பற்றிய விவரங்கள் வருமாறு:

★ டிசெ. 15—8.30-12.30 — பிரதான வீதி, பிலிப் நேர் சிங்கோம். 2.00 - 4-30 — இராசாவின்தோட்டம் அருள் மாதா சனசமூக நிலையம்.

★ டிசெ. 16—8.30-12.30 — சனசக்தி சனசமூக நிலையம், அரசடி. 2.00-4.30 — சந்தனமாதா தேவாலயம், பாண்டியன்தாழ்வு.

★ டிசெ. 17—8.30-12.30 — கொண்டலடி சனசமூக நிலையம். 2.00-4.30 — குருநகர் சனசமூக நிலையம்.

★ டிசெ. 18—8.30-12.30 — மானிப்பாய் வீதி, சிவன் பண்ணை சந்தி. 2.00-4.30 — கந்தர்மடம், பழைய சிகிச்சை நிலையம்.

★ டிசெ. 21—8.30-12.30 —சுண்டுக்குளி சனசமூக நிலையம். 2.00-4 . 30 — மூத்தவிநாயகர் ச. ச. நிலையம்.

★ டிசெ. 22—8.30-12.30 — குருநகர் சந்தை. 2.00-4.30 — பெருமாள் கோயிலடி மேற்கு வீதி.

★ டிசெ. 23— 8.30-12.30 — நீராவியடி ச.ச.நிலையம். 2.00 - 4.30 —கிறிஸ்துராசா தேவாலயம், கொய்யாத் தோட்டம்.

★ டிசெ. 28— 8.30-12.30 காந்தி ச. ச. நிலையம், அரியாலை. 2.00 -4-30 — றெக்கிளமேசன் சனசமூக நிலையம்.

★ டிசெ. 29 —8.30-12.30 நாவலர் மண்டபம், நல்லூர். 2.00 - 4.30 — ஆத்திசூடி சனசமூக நிலையம்.

★ டிசெ. 30—8.30-12.30 — மகப்பேற்று நிலையம், சுவாமியார் வீதி. 2.00-4.30 — சோமசுந்தரம் அவனியூ முன் பள்ளி.

★ டிசெ. 31—8.30-12.30 — யூபிளி (மடம்) சிகிச்சை நிலையம். 2.00 - 4.30 — நாவாந்துறை செள். நீக்கிலஸ் சனசமூக நிலையம்.

★ ஜன. 4 — 8.30-12.30 கால்நடை பணிமனை, பிறவுண் வீதி, நாவலர் வீதி. 2.00 - 4.30 ஈச்சமோட்டை சனசமூக நிலையம்.

★ ஜன. 5—8.30 - 12..30 -— நல்லூர் ஆரம்ப சுகாதார நிலையம், 2ஆம் கட்டை. 2.00 - 4.3 0— வேம்படி வீதி, ஒ. எல். ஆர். அண்மை.

★ ஜன.6 —8.30-12.30 — சிறாம்பியடி கிராமசேவையாளர் பணிமனை. 2.00 - 04.30 — சிவலிங்கப்புளியடி, கே. கே. எஸ். வீதி சந்தி.

★ ஜன. 7 — 8.30 – 12.30 — கொழும்புத்துறை ச. ச. நிலையம். 2.00 – 04.30 — கண்டி வீதி மகப்பேற்று நிலையம், அரியாலை.

★ ஜன. 8 — 8.30 - 12.30 — செள். றோக் போசாக்கு நிலையம். 2.00 - 04.30 — கொட்டடி ச. ச. நிலையம்.

★ ஜன.11 — 8.30 - 12.30 — நாச்சிமார் கோயிலடி சனசமூக நிலையம். 2.00 - 04.30 — செள். அன்ரனீஸ் சனசமூக நிலையம், பாசையூர்.

★ ஜன.12 — 8.30 -12.30 — கல்வியங்காடு காசிப்பிள்ளை வித்தியாலயம். 2.00 - 04.30—செள். செபஸ்தியன் சனசமூக நிலையம்.

★ ஜன. 18 — 8.30-12.30 — நாவலர் வீதி, மகப்பேற்று நிலையம் (கீரிப்பிள்ளையார் கோயிலடி). 2.00 - 04.30 — ஐந்து சந்தி, லக்கி முன் பள்ளி அருகில்.

★ ஜன. 19 — 8.30-12.30 —கலைவாணி ச. ச. நி., அரியாலை. 2.00 - 04.30 — கிராம சேவையாளர் பணிமனை, நாவலர் வீதி ஜே/91 போசாக்கு பு. வா. நிலையம்.

★ ஜன. 20 — 8.30-12.30 — சரஸ்வதி ச. ச. நி. , அரியாலை. 2.00-04.30 — ஸ்ரீ விக்கினேஸ்வரா வித்தியாலயம், கச்சேரி நல்லூர் வீதி.

★ ஜன. 21 — 8.30-12.30 — நாயன்மார்கட்டு ச. ச. நி. 2.00-04.30 — திருமகள் சனசமூக நிலையம். (ஐ-7)

# 12 ஆயிரம் தென்னங்கன்றுகள் விநியோகம்

சுன்னாகம், டிசெ. 10 வலி.தெற்கு பிரதேச சபையால் அப்பகுதி மக்களுக்கு 12 ஆயிரம் தென்னங்கன்றுகள் வழங்கப்படுகின்றன.

கடந்த ஞாயிறு காலை 9.30 மணிக்கு சுன்னாகம் தெற்கு முத்தமிழ் மன்றத்தில் வைத்து இத் தென்னங்கன்று விநியோகம் ஆரம்பிக்கப்பட்டது.

சுன்னாகம் தெற்கு கிராம சேவகர் எஸ்.வைத்தியநாதன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் வலி.தெற்கு பிரதேச சபைத் தலைவர் தி.மா. செல்வராசா கலந்து கொண்டு தென்னங்கன்றுகளை பொது மக்களுக்கு இலவசமாக வழங்கினார்.

விவசாய சம்மேளனத் தலைவர் க. தியாகலிங்கம், உடுவில் கல்விக் கோட்ட திட்ட உதவியாளர் தா. இராசரத்தினம், செ. கதிர்காமநாதன் ஆகியோரும் இந்நிகழ்வில் உரையாற்றினர்.

அன்றைய தினம் ஏனைய கிராம சேவகர் பிரிவுகளிலும் பிரதேச சபைத்தலைவர் இத் தென்னங்கன்று விநியோகத்தை ஆரம்பித்து வைத்தார். பிரதேச சபைப் பகுதியில் வாழும் ஒவ்வொரு குடும்பத்துக்கும் இலவசமாக இத் தென்னங்கன்றுகளை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக பிரதேச சபைத் தலைவர் தி. மா. செல்வராசா தெரிவித்தார்.

[ஐ-27]

# நியமனம்

நெல்லியடி, டிசெ. 10 வடமராட்சி கிழக்கு அம்பன் மத்திய மருந்தகத்திற்கு நான்கு சுகாதார தொழிலாளர்கள் கடந்த முதலாம் திகதி தொடக்கம் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மூன்று பெண்களும் ஓர் ஆணுமாக நான்கு தொழிலாளர்கள் அமைய அடிப்படையில் யாழ். பிராந்திய பிரதி சுகாதாரப் பணிப்பாளரினால் நியமனம் செய்யப்பட்டிருக்கின்றார்கள்.

(ஐ-109)

பிரத்தியேக வகுப்புகள்
வர்த்தகமும் கணக்கியலும்
ஆரம்பம் 11- 12-98
Year 9, 10, O/L
மாலை :- 4. 00 மணி
Accounting
A/L - 99 கம்பனி
A/L- 2000
தொங்கல் கணக்கு
ஆசிரியர்:-
K. அற்புதராஜா
(B. Com)
கொக்குவில் மேற்கு.

# அனுருத்த வாகன அணிமீது ஷெல் வீச்சு சம்பவம்; 47 பேர் மீது விசாரணை

பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த கடந்த ஞாயிற்றுக் கிழமை ஒட்டுசுட்டானுக்கு விஜயம் செய்தபோது இடம்பெற்ற ஷெல் தாக்குதல் தொடர்பாக 47 பேர் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்படுவதாக வவுனியா படை வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தத் தாக்குதல் தொடர்பாக ஒட்டுசுட்டானில் தங்கியுள்ளவர்களில் இளைஞர், யுவதிகள் உட்பட நூற்றுக்கு மேற்பட்டவர்கள் விசாரிக்கப்பட்டதாகவும் —

இவர்களில் 47 பேர் தொடர்ந்து விசாரிக்கப்பட்டு வருவதாகவும் — தெரிவிக்கப்பட்டது. (ஐ-3-164)

யாழ். பல்கலைக் கழக வணிக மாணவர் மன்றம்
ஷ மன்ற நிதி வளர்ச்சிக்காக
பருத்திநகர் சாண்டோ
M. துரைரத்தினத்தின் அதிசிறந்த மாணவன்
கற்கோவளம் N.விஜயமோகனின்
மாணவர்களின் வீரதீரச் செயல்கள்
இடம்: யாழ். பல்கலைக்கழக மைதானம்
நாள்: 19 – 12 – 1998
நேரம்: மாலை 2. 00 – 4.00மணி
வணிக மாணவர் மன்றம்
(61231)

MATHS CENTRE
M.M.V Road, Nelliady.
புதிய கல்வியாண்டு 99
O ஆண்டு 5 தொடக்கம் 11 வரை
ஆரம்பம்: 10 - 12 1998 வியாழன் பி.ப 3 மணி
5ஆம் ஆண்டுக்கான விசேட புலமைப் பரிசில் வகுப்புக்களும் நடைபெறும்,
ஆசிரியர் திரு. வல்லிபுரம்
(சி-5758)

UNIVERSITY OF JAFFNA

University of Jaffna will entertain applications from suitably qualified persons upto 12 th February 1999 for the undermentioned posts.

1. Professor of Anatomy / Pathology / Forensic Medicine / Medicine/Pharmacology/Paediatrics / Obstetrics & Gynaecology.

2. Senior Lecturer Gr. I / Senior Lecturer Gr. II / Lecturer (Probationary) in Physiology/Community Medicine/Biochemistry/Anatomy/Pathology / Microbiology / Parasitology/Forensic Medicine / Pharmacology / Paediatrics / Obstetrics & Gynaecology / Surgery / Psychiatry.

Salary scale:

| | |
|---|---|
| Professor: | Rs. 22,950- 6x425-25, 500 p.m. |
| Associate Professor : | Rs. 21,250- 6x340-23,290 p.m. |
| Senior Lecturer Gr. I : | Rs. 19,125- 8x340-21,845 p m. |
| Senior Lecturer Gr. II : | Rs. 15,725- 5x340-17,425 p.m. |
| Lecturer (Probationary) : | Rs. 9,350-10x275-12,100 p.m. |

Note:

In addition to the above salary, an academic allowance of 30% of the salary will also be paid.

Application forms and other details may be obtained from the office of the Assistant Registrar / Establishments (Academic) on a payment of Rs. 20 for each form. Those who wish to obtain application forms by post are requested to send a money order / Postal order drawn in favour of the "Bursar, University of Jaffna" together with a self addressed stamped envelope 23x10 c. m. in size.

Applicants from University System / Government Departments/Corporations and Statutory Boards should channel their applications through the Heads of respective Institution.

REGISTRAR.

University of Jaffna,
Sri Lanka.
07th December, 1998.

(C/5756)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

மாணிக்கம் முத்தம்மா ஆகிய எனது தேசிய அடையாள அட்டை (356691334V) சித்தங்கேணி- யாழ்ப்பாணம் பஸ்ஸில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மாணிக்கம் முத்தம்மா, கீரிமலை வீதி, சித்தங்கேணி என்ற முகவரியில் ஒப்படைக்கவும்.

(61208)

### விற்பனைக்கு

வான்கோழி, கினிக்கோழி முட்டை விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்: S. விஜயகுமார் Y. M. C. A. கன்ரீன், 109, கண்டி வீதி, யாழ்ப்பாணம் (கச்சேரி முன்பாக).

(61212)

### ராசி பலன்

09-01-99, 25-05-99 திகதிகளில் வியாழன் மாற்றம், 12 ராசிகளின் பலன்கள் பல பக்கங்களில். சோதிட ஞானி சண். மாஸ்ரரின் ஆக்கம் வெளிவந்துவிட்டது. ரூபா15. 308B, கே. கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

(61209)

---

உ

## கோண்டாவில் கிழக்கு ஆசிமட அரசடி விநாயகர் ஆலயம்

## புனராவர்த்தன நவகுண்ட பக்ஷ பிரதிஷ்டா நூதன இராஜகோபுர மஹா கும்பாபிஷேகம்

13 – 12 – 98 ஞாயிறு காலை
10-38 தொடக்கம் 11-27 வரை.

பிரதிஷ்டா பிரதமகுரு:
**சிவஸ்ரீ தானு வாசுதேவ சிவாச்சாரியார்**

**ஆசியுரை வழங்குவோர்:**
நல்லை ஆதீன முதல்வர்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரியார் சுவாமிகள்
கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்
திரு. ஆறு. திருமுருகன் அவர்கள்

**விசேட மேளக்கச்சேரி:**
கானமூர்த்தி குழுவினர்
உதயசங்கர் குழுவினர்
சுந்தரமூர்த்தி குழுவினர்

மாலை 4 மணியளவில் விசேட மேளக்கச்சேரியுடன் விநாயகப் பெருமான் வீதியுலா வருவார்.

குறிப்பு: எண்ணெய்க் காப்பு **11-12-98** வெள்ளிக்கிழமை காலை 8மணிதொடக்கம் 5மணிவரை.

**- ஆலய நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை.**

(61223)

---

## Mentally Retarded Home
## THE ARK - UDUVIL

மேற்படி நிறுவனத்தில் பிள்ளைகளுக்கு கல்வி கற்பிக்க, அவர்களைப் பராமரிக்க பணியாளர் (பெண்கள்) தேவை. பணிபுரிய விரும்புவோர் 21 - 12 - 98 -க்கும் 25 - 12 - 98 -க்கும் இடையில் பொறுப்பாளருடன் தொடர்பு கொள்ளவும்.

வயது எல்லை — 20 - 25
தகைமை — G. C. E A/L or O/L
விடுதி வசதி உண்டு.

சகோ. கிறிஸ்ரியானா
பொறுப்பாளர்.

(61220)

---

## காங்கேசன் சிமெந்துத் தொழிற்சாலைத் தொழிலாளர்கள் அனைவரதுகவனத்திற்கும்

இன்று (**10 - 12 - 98**) காலை 8.00 மணியிலிருந்து மாலை 4.00 மணிவரை நல்லூர் கந்தசுவாமி கோயில் முன்றலில் மனித உரிமைகள் மீறப்படுவதை வலியுறுத்தும் வகையில் அடையாள உண்ணாவிரதம் ஒன்றினை ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினர் நடத்த உள்ளனர்.

இந் நிகழ்வில் சிமெந்துத் தொழிலாளர்களையும் பங்குபற்றும்படி ஈ. பி. டி பியினர் விடுத்த வேண்டுகோளுக்கு இணங்க சகல அங்கத்தவர்களையும் பங்குபற்றும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தலைவர்
**கா. சி. பொதுத் தொழிலாளர் யூனியன்.**

(61227)

---

# பாராட்டுகின்றோம்

1998–07–18, 19 ஆம் திகதிகளில் நடத்தப்பட்ட சுருக்கெழுத்தாளர் ஆள்சேர்ப்புப் போட்டிப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையிலும், 1995 இல் நடத்தப்பட்ட தமிழ் தட்டெழுத்தாளர் ஆட்சேர்ப்புப் போட்டிப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையிலும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்ட எமது கழகத்தில் பயின்ற கீழ்க் குறிப்பிட்டவர்களைப் பாராட்டுவதில் மகிழ்ச்சியடைகிறோம்.

### தமிழ் மொழி மூலம் சுருக்கெழுத்தாளர் பரீட்சை

| பெயர் | | | வதிவிடம் | பெற்ற புள்ளிகள் |
|---|---|---|---|---|
| மோ. | தர்ஷினி | 0 | ஊறணி | 174 |
| சி. | ஜெயரூபன் | ஃ | நாவலடி, பருத்தித்துறை | 173 |
| ஜெ. | வாசுகி | * 0 | கெருடாவில் | 172 |
| த. | முருகாம்பிகை | * | மாலுசந்தி | 162 |
| அ. | உதயபவானி | 0 | கரணவாய் மேற்கு | 161 |
| ந. | பிருந்தா | ஃ | பொலிகண்டி | 159 |
| ச. | மதிரஜனி | * | கரணவாய் வடக்கு | 147 |
| செ. | லலிதா | * | துன்னாலை | 147 |
| பூ. | சுஜாதா | | வல்வெட்டித்துறை | 146 |
| சு. | சுபாஜினி | | வல்வெட்டி | 144 |
| ச. | ஜசிந்தா | * | கரவெட்டி | 137 |
| ந. | இராசேந்திரராணி | * | கொம்மந்தறை | 135 |
| க. | சகிதா | * | தெடுத்தனை | 134 |
| ச. | சிவபாலினி | ஃ 0 | துன்னாலை | 130 |
| தே. | சுகன்யா | | இமையாணன் | 128 |
| த. | சசிகலா | | வல்வெட்டி | 126 |
| த. | யோகராணி | | கம்பர்மலை | 124 |
| க. | பத்மஸ்ரீ | * | அல்வாய் | 117 |
| மு. | அமிர்தகுமாரி | * | கரவெட்டி | 112 |
| சி. | நிர்மலா | | திக்கம் | 107 |
| த. | சுதாஜினி | * | கம்பர்மலை | 104 |
| இ. | கவிதா | 0 | நவிண்டில் | 103 |
| கு. | சுதர்சன் | 0 | உடுப்பிட்டி | 101 |
| இ. | தவமலர் | ஃ | கரணவாய் | 93 |
| இ. | ஜெயந்தி | * | உடுப்பிட்டி | 88 |

### ஆங்கிலமொழி மூலம் சுருக்கெழுத்தாளர் பரீட்சை

| | | | | |
|---|---|---|---|---|
| சு. | சுபாஜினி | * 0 | வல்வெட்டி | 165 |

### தமிழ் தட்டெழுத்தாளர் பரீட்சை

| | | | | |
|---|---|---|---|---|
| தி. | கஜலட்சுமிதேவி | * | தொண்டமனாறு | 70 |
| ச. | சுமதினி | * | நவிண்டில் | 70 |
| க. | ஆனந்தசோதி | | வதிரி | 70 |
| செ, | பிறேமா | 0 | கரவெட்டி | 70 |
| கு. | குகதர்சினி | ஃ 0 | பருத்தித்துறை | 70 |

ஃ தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் அனுசரணையுடன் பயின்றவர்கள்.
* தேசிய பயிலுநர் கைத்தொழில் அதிகார சபையின் அனுசரணையுடன் பயின்றவர்கள்.
0 கழகத்தில் தொண்டர் ஆசிரியர்களாகவும் கடமையாற்றி உள்ளனர்.

மேற்குறிப்பிட்ட தமிழ்மொழி மூல சுருக்கெழுத்தாளர் பரீட்சைக்குத் தோற்றியோர்களுக்கு விசேட சுருக்கெழுத்து வகுப்புக்களை நடத்திய செல்வி சி. மீரா (தட்டெழுத்தாளர், புலோலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்) அவர்களுக்கும் செயன்முறைப் பயிற்சியை வழங்கிய பொது நிறுவனங்களுக்கும் எமது கழகத்தின் சார்பில் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகம்
வதிரி, கரவெட்டி.

(சி/ 5757)

---

பருத்தித்துறை - தும்பளை நெல்லண்டைப்

## பத்திரகாளி அம்மன் கோயில் வழிபடுவோர் சங்கம்

கோகுலம், வால்டன் இடம், தும்பளை, பருத்தித்துறையில் 6 - 12 - 1998 ஆம் திகதி நடைபெற்ற வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் கீழ்வரும் 27 நிர்வாக சபை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்,

போஷகர் – பொருளாளர்:
**சிவஸ்ரீ தி. சோமாஸ்கந்தராஜாக்குருக்கள்**
(தும்பளை)

தலைவர்:
**திரு. பொ. இராசதுரை**
(புலோலி கிழக்கு)

உப தலைவர்:
**திரு. சி. கனகசபை**
(தம்பரவளை)

செயலாளர்:
**திரு. சி. வாமதேவன்**
(தும்பளை மத்தி)

உப செயலாளர்:
**திரு. க. ஆனந்தகணேஷ்**
(நெல்லண்டை கிழக்கு)

### நிர்வாகசபை உறுப்பினர்கள்

01. திரு. ப. ஞானேந்திரன்
02. திரு. வ. தங்கராசா (கடையகாடு)
03. திரு. ஆ. மகேசு (தும்பளை தெற்கு)
04. திரு. சி. தங்கவடிவேலு (கற்கோவளம்)
05. திரு. ஆ. கந்தையா (தும்பளை கிழக்கு)
06. திரு. சு. தர்மபாலகிருஷ்ணன் (தும்பளை மேற்கு)
07. திரு. வ. சரவணபவன் (மாதனை)
08. திரு. பொ. சுப்பிரமணியம் (புலோலி வடக்கு)
09, திரு. சி. சூரசங்காரன் (பருத்தித்துறை வடக்கு)
10. திரு. சி. சிதம்பரநாதன் (தம்பசிட்டி)
11. திரு. சி. இராமச்சந்திரன் (வியாபாரிமூலை)
12. திரு. சி. தங்கவேலாயுதம் (அவ்வொல்லை)
13, திரு. த. குகதாஸ் (சாவகச்சேரி)
14. திரு. ஜே. தவக்குமார் (கோப்பாய்)
15. திரு. மு. முகுந்தன் (தும்பளை தென் மேற்கு)
16. திரு. க. குருசாமி (இன்பருட்டி)
17- திருமதி ச. வள்ளிப்பிள்ளை (நெல்லண்டை மத்தி)
18. திருமதி வி. லீலாவதி (நெல்லண்டை மேற்கு)
19. திருமதி இ. அம்மன்கிளி (மயிலிட்டி)
20. செல்வி வே. செல்வரத்தினம் (உடுத்துறை)
21. அருட்திரு. கணபாலசுவாமி (மந்திகை)
22. சிவத்திரு. பா. இலட்சுமணன் ஐயர் (இலட்சுமணன் தோட்டம்)

என்றும் ஸ்ரீபத்திரகாளியின் திருவடிக் கீழ்

**திரு. சி. வாமதேவன்**
செயலாளர்

**திரு. பொ. இராசதுரை**
தலைவர்

(சி-5759)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லைக் கிராமங்களில் உள்ள மக்கள் யுத்தத்தை நிறுத்த கோருகின்றனர்

## ஆய்வு செய்த ஆணைக்குழு அறிக்கை

கொழும்பு, டிசெ. 10

வடக்கு — கிழக்கு மாகாண எல்லைக் கிராமங்களில் வாழும் மக்கள் 'யுத்தத்தை நிறுத்த வேண்டும் என்று கோருவதாக எல்லைக் கிராம மக்களின் வாழ்க்கை தொடர்பாக ஆராய்ந்த ஆணைக்குழு தனது இடைக்கால அறிக்கையில் தெரிவித்துள்ளது.

வடக்கு — கிழக்கு எல்லைக் கிராம மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக விசாரணை நடத்த அமைக்கப்பட்ட ஆணைக்குழு தனது விசாரணைகளை முடித்து இடைக்கால அறிக்கையை வெளியிட்டுள்ளது.

இருபதுக்கு மேற்பட்ட கல்வி நிபுணர்கள் அங்கம் வகிக்கும் இந்த ஆணைக்குழு தனது இடைக்கால அறிக்கையை வெளியிட கொழும்பில் செய்தியாளர் மாநாடு ஒன்றை நடத்தியது.

''யுத்தத்தை நிறுத்தி சமாதானத்தை நிலைநாட்டுவோம் என்று கூறி ஆட்சிக்கு வந்த அரசாங்கம் இன்றும் யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவரவில்லை. உடனடியாக யுத்தத்தை நிறுத்தி சமாதானத்தை நிலைநாட்ட அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்'' என்று எல்லைக்கிராம மக்கள் தெரிவித்தனரென அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (ஐ-3-164)

# இசை, நடன பட்டதாரித் துறைக்கு 200 பேர் பதிவு

யாழ். பல்கலைக்கழக வெளிவாரிப் பரீட்சைகள் பிரிவில் புதிதாக அறிமுகம் செய்யப்பட்டுள்ள இசை, நடனப் பட்டதாரிக் கற்கை நெறிக்கு 200 மாணவர்கள் தம்மைப் பதிவு செய்துள்ளனர்.

இவ்வாறு பதிவினை மேற்கொண்டவர்களில் பெரும்பாலானோர் யாழ். பல்கலைக்கழக 'இராமநாதன் நுண்கலைப்பீடத்தில் இசை, நடனத்துறைகளில் டிப்ளோமாக் கற்கை நெறிகளைப் பூர்த்தி செய்தவர்களாவர்.

இன்னும் சிலர் மட்டக்களப்பு விபுலானந்த இசை, நடனக் கல்லூரி மற்றும் தமிழ்நாடு, சென்னை அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் டிப்ளோமாக் கற்கை நெறிகளைப் பூர்த்தி செய்தவர்களாவர்.

மேற்படி பட்டப்படிப்புக் கற்கை நெறிக்கு பதிவு செய்தவர்களுக்கான பரீட்சைகள் அடுத்தவருட முற்பகுதியில் நடைபெறும் என வெளிவாரிப் பரீட்சைகள் பிரிவு அறிவித்துள்ளது.

இலங்கையில் உள்ள பல்கலைக்கழகங்களில் யாழ். பல்கலைக்கழகத்தில் மட்டுமே முதன் முறையாக இசை, நடனத்துறை சார்ந்த பட்டப்படிப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ 7)

## பாதணிக் கண்காட்சி

யாழ்ப்பாணம், டிசெ. 10

பாதணிக் கண்காட்சியும், விற்பனையும் இம்மாதம் 19 ஆம், 20 ஆம் திகதிகளில் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளையில் பேராசிரியர் வீ. கே. கணேசலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது

ஐ.நா. அபிவிருத்தித்திட்ட உதவியுடன் செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையினால் நடத்தப்பட்டு வந்த வதிரி தோல் பொருள் உற்பத்தி நிலையத்தில் உற்பத்தி செய்யப்பட்ட பாதணிகளே இந்தக் கண்காட்சியில் வைக்கப்படவுள்ளன.

கடந்த ஆறு மாத காலமாக இந்த நிலையத்தில் உற்பத்தி செய்யப்பட்ட பாதணிகள் கண்காட்சிக்கு வைக்கப்பட்ட பின்னர் விற்பனை செய்யப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது. (ஐ-5)

# உளநலம் குன்றியோரைப் பேண உளநல சங்கம்

வலி. வடக்கு, டிசெ. 10

உளநலம் பாதிக்கப்பட்டவர்களின் நலன்களைப் பேணுவதற்கென யாழ்ப்பாணத்தில் 'உளநல சங்கம்' என்ற பெயரில் அரச சார்பற்ற தொண்டர் நிறுவனமொன்று தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

1968 ஆம் ஆண்டு முதல் மேற்படி சங்கம் 'மனநோயாளர் நண்பர்கள் சங்கம்' என்ற பெயரில் தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையை அண்டியதாக இயங்கி வந்தது

தற்போது மேற்படி சங்கம் அரச சார்பற்ற தொண்டர்நிறுவனமாகப் பதிவு செய்யப்பட்டு உளநலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு வேண்டிய உதவிகளை வழங்குவதற்கானநடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட முதலாவது அரச சார்பற்ற நிறுவனம் இதுவாகும். (ஐ-86)

# மானிப்பாய்ப் பகுதியிலும் நாய்களுக்குத் தடுப்பூசி

சண்டிலிப்பாய், டிசெ. 10

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் வளர்ப்பு நாய்களுக்கு விசர் நோய்த் தடுப்பு ஊசி மருந்து போடப்பட்டு வருகின்றது.

இதன் பிரகாரம் இன்று வியாழக்கிழமை சுழிபுரம் மேற்கு கிராம முன்னேற்றச் சங்கம், சுழிபுரம் கிழக்கு வள்ளிஅம்மன் கோவிலடி, பனிப்புலம் கிராம அலுவலர் அலுவலகம், பல்லசுட்டி காந்திஜி சனசமூக நிலையம் ஆகிய இடங்களில் வைத்து நாய்களுக்கு தடுப்பு ஊசி மருந்து ஏற்றப்படும்.

நாளை வெள்ளிக்கிழமை சங்கானை தேவாலய வீதியிலுள்ள சங்கானை அ.மி.த.க. பாடசாலை, சங்கானை—அராலி வீதி குடியேற்றத் திட்டம், சங்கானை மத்திய பஸ் நிலையம், காளி கோவிலடி அம்பாள் சனசமூக நிலையம் ஆகிய இடங்களிலும்—

எதிர்வரும் 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தொல்புரம் கமநல சேவை நிலையம், மூளாய் நல்லதம்பி கடையடி, வட்டுக்கோட்டை றாத்தலடி, சிவன்கோவிலடி, வட்டுக்கோட்டை முதலி கோவிலடி சங்கக் கடையடி ஆகிய இடங்களிலும்—

எதிர்வரும் 17 ஆம் திகதி வியாழக்கிழமை சங்கரத்தை கால் நடை வைத்திய அதிகாரி அலுவலகம், அராலி மேற்கு, கோட்டைக்காடு அரசினர் கிராமிய வைத்தியசாலை, அராலி தெற்கு கிராவோலை கிராம அபிவிருத்திச் சங்கம், அராலி கிழக்கு வாலையம்மன் கோவிலடி ஆகிய இடங்களிலும் வைத்து விசர் நோய்த் தடுப்பு ஊசி மருந்து வளர்ப்பு நாய்களுக்கு ஏற்றப்படும் என்று சங்கானை பொதுச் சுகாதார பரிசோதகர் எஸ். இராசதுரை தெரிவித்தார். (ஐ-135)

### இருபாலைப் பகுதியில்

# புடைவைக் கடையில் பொருள்கள் சூறை

வலி. கிழக்கு, டிசெ. 10

இருபாலை கோண்டாவில் வீதியில் உள்ள புடைவைக் கடை ஒன்று இரவுவேளை திருடர்களால் உடைக்கப்பட்டுபெறுமதிமிக்க புடைவைகள் களவாடப்பட்டுள்ளன.

கடந்த திங்கள் இரவு கடும் மழை பெய்து கொண்டிருந்த சமயம்திருடர்கள் புடைவைக் கடையின் முன்பக்க கதவினை உடைத்து உடுபுடைவைகள், மணிக்கூடுகள் உட்பட 75 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களைத்திருடிச் சென்றுள்ளதாகக் கூறப்படுகிறது.

இது தொடர்பாக கோப்பாய் பொலீஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஐ-180)

## குளங்கள் அனைத்தும் நிரம்பின

நல்லூர், டிசெ. 10

தொடர்ந்து பெய்துவரும் பலத்த மழை காரணமாக யாழ். நகரில் உள்ள குளங்கள் முற்றாக நீர் நிரம்பிக் காணப்படுகின்றன.

நல்லூர் கோயில் வீதி பண்டாரக்குளத்தை அண்மித்த பகுதிகள் உட்பட தாழ்வான இடங்களில் உள்ள வீடுகளில் வெள்ளம் புகுந்துள்ளதால் பல குடும்பங்கள் குடியிருப்புக்களை விட்டு வெளியேறியுள்ளன.

நகரின் பல வீதிகளின் மேலாக வெள்ளம் பாய்ந்த வண்ணம் உள்ளது. (ஐ-103)

# கோப்பாய்ப் பகுதியில் விவசாயிகள் பாதிப்பு

கடந்த சில நாள்களாகப் பெய்து வரும் கடும் மழையினாலும் கடந்த செவ்வாய் அன்று நண்பகல் வீசிய மினி சூறாவளிக் காற்றினாலும் கோப்பாய்ப் பகுதி விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தோட்டங்களில் சிறு மரக்கறிப் பயிர்கள் வெள்ளத்தில் மூழ்கி அழியும் நிலையில் காணப்படுகின்றன. அதே வேளை கடும் காற்றினால் வாழை, மரவள்ளி போன்ற மரங்கள் முறிந்து வீழ்ந்துள்ளன.

யாழ்ப்பாண விவசாய விளை பொருள்கள் பிற இடங்களுக்கு ஏற்றுமதி வசதி இன்றி உற்பத்திச் செலவிலும் குறைவாக விற்பனையாவதால் விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கும் வேளையில் இந்த இயற்கை அழிவினாலும் அவர்கள் மிகவும் நஷ்டமடைந்துள்ளனர்.

கோப்பாய். கோண்டாவில், உரும்பிராய், நீர்வேலி ஆகிய பிரதேச விவசாயிகளே கூடுதலாகப் பாதிப்படைந்துள்ளனர். (ஐ-72)

### முகாம்களைப் பார்வையிட

# உலக உணவுத் திட்ட அதிகாரிகள் வன்னிக்கு

வவுனியா, டிசெ. 10

வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் உள்ள முகாம்களில் வாழும் மக்களுக்கு நிவாரண உதவிகள் ஒழுங்காகக்கிடைக்கின்றனவா என்பதை நேரில் ஆராய்வதற்காக உலக உணவுத்திட்ட அதிகாரிகள் வன்னி சென்றுள்ளனர்.

உலக உணவுக் திட்டத்தின் திட்ட அதிகாரி டொமினிக் பிராங்போட், தேசிய திட்ட அலுவலரான எம். எஸ். எம். அஸ்மீ, அரசின் சமூகசேவைப் பணிப்பாளர் என். டி. ஹெட்டியாராச்சி ஆகியோர் கொண்ட குழு நேற்றுமுன்தினம்வவுனியாவில்பூந்தோட்டம், நெலுக்குளம், வேப்பங்குளம் முகாம்களுக்கு சென்று அகதிகளுடன் கலந்துரையாடியது.

செட்டிகுளத்தில் உள்ள அடம்பன்குளம் முகாமில் உள்ள அகதிகளை இன்று சந்தித்த பின்னர் குழு மன்னார் செல்லும். (உ-3-164)

# நல்லூர் செயலக பிரிவில் மழையால் 200 குடும்பங்கள் இடம் பெயர்வு

தொடர்ந்து பெய்து வரும் மழையினால் நல்லூர்ப் பிரதேச செயலர் பிரிவில் 200 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன

திருநெல்வேலி பரவைக் குளத்தைச் சூழவுள்ள சுமார் 70 குடும்பங்கள் இடம் பெயர்ந்து அருகில் உள்ள ஆலயத்தில் தஞ்சமடைந்துள்ளன.

கொக்குவில் தலையாளியில் 15 வீடுகளில் வெள்ளம் புகுந்ததால் அவற்றில் வசித்த குடும்பங்கள் இடம் பெயர்ந்துள்ளன.

நீராவியடியில் 38 குடும்பங்கள் வெள்ளத்தினால் இடம் பெயர்ந்துள்ளன.

இவை தவிர்ந்த ஆத்திசூடி, அரியாலை, நந்தாவில் பகுதிகளிலும் தாழ்ந்த பகுதியில் உள்ள மக்கள் வெள்ளத்தினால் இடம்பெயர வேண்டி ஏற்பட்டுள்ளது. (ஐ-86)

## தொழிலாளர் கற்கைநெறி அனுமதி

யாழ்ப்பாணம், டிசெ. 10

யாழ். பல்கலைக் கழகத்தில் தொழிலாளர் கற்கைநெறிக்கு ஆள் சேர்ப்பதற்காக நடத்தப்படும் அனுமதிப் பரீட்சை எதிர்வரும் 12 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு பல்கலைக்கழக பரீட்சை மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

பரீட்சார்த்திகளுக்குரிய அனுமதி அட்டைகள் யாவும் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும்—

அனுமதி அட்டைகள் கிடைக்கப் பெறாதவர்கள் பரீட்சைகள் பிரிவுடன் தொடர்பு கொண்டு தமது பரீட்சை அனுமதியை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-7)

## பாராட்டு விழா

யாழ்ப்பாணம், டிசெ. 10

வண்ணை ஸ்ரீ வைத்திலிங்கம் வித்தியாலயத்தில் 5 ஆம் ஆண்டுப்புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களையும், ஊக்குவித்துவழி நடத்திய அதிபர், ஆசிரியரையும் பாராட்டிக் கௌரவித்து பரிசில் வழங்கும் வைபவம் இன்று காலை 10-30மணிக்கு பாடசாலை மண்டபத்தில் வித்தியாலய அதிபர் திரு. செல்வநாயகம் தலைமையில் நடைபெற விருக்கிறது. (உ-3)

# தபாலில் ஒலி நாடா அனுப்பும் நடைமுறை

யாழ்ப்பாணம், டிசெ. 10

யாழ்ப்பாணத்திலிருந்து வெளியிடங்களுக்கு ஒலிப் பதிவு நாடாக்களை அனுப்புவதற்கான நடைமுறைகளை யாழ். பிரதம தபாலகம் அறிவித்துள்ளது.

ஒலிப்பதிவு நாடாக்களை அனுப்புவதற்கான நடைமுறைகள் வருமாறு:-

★ இந்த நாடாவில் அரசியல் விடயங்கள் மற்றும் அரச விரோத செயற்பாடுகள் பற்றிய குறிப்புகள் தவிர்க்கப்பட்டிருக்க வேண்டும்.

★ ஒலிப்பதிவு நாடாவை அனுப்புபவருடைய பெயர், விலாசம், தேசிய அடையாள அட்டை இலக்கம் அது போய்ச் சேர வேண்டிய விவரங்கள் ஆகியவை தபாலகத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

★ நாடாவில் பதிவு செய்துள்ள விடயங்கள் குறித்தும் தகவல்கள் வழங்கப்பட வேண்டும்.

இந்த விவரங்களைச் சமர்ப்பித்த பின்னர் யாழ். சிவில் நிர்வாகப் பகுதியினருக்கு குறிப்பிட்ட ஒலிப்பதிவு நாடா பற்றிய சான்றிதழ் ஒன்று பிரதம தபால் அதிபரினால் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் ஒலிப்பதிவுநாடா தபாலில் குறிப்பிடப்பட்ட இடத்திற்கு அனுப்பி வைக்கப்படும் என்று தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-5)

## பிரிவுபசார விழா

பலாலி ஆசிரிய கலாசாலை இரண்டாம் வருட மாணவர்களுக்கான பிரிவுபசார விழா இன்று வியாழக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு கலாசாலை சுப்பிரமணியம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மாணவர் மன்றத் தலைவர் ச. லலீசன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வலயம் ஒன்றின் கல்விப் பணிப்பாளர் கலாநிதி நா. தணிகாசலம் பிள்ளையும், சிறப்பு விருந்தினராக கலாசாலை அதிபர் சோ. பத்மநாதனும் கலந்து கொள்வர். (ஐ-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுகியகால விவசாய பயிற்சிக்கு விண்ணப்பம்

திருநெல்வேலியில் உள்ள மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் குறுகியகால விவசாயப் பயிற்சிநெறிக்கான விண்ணப்பங்கள்கோரப் பட்டுள்ளன.

மேற்படி கற்கைநெறிக்கு வயது வேறுபாடின்றி ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

பயிற்சி நெறியில் இணைந்து கொள்வோருக்கு நாற்று மேடைப் பராமரிப்பு, கூட்டெரு தயாரித்தல், வதிவிட வேளாண்மை, சேதனப் பயிர்ச்செய்கை மற்றும் ஒருங்கிணைந்த விவசாயம், பழமரநாற்றுக்கள் ஒட்டுதல், பதிவைத்தல் போன்ற விடயங்களில் பயிற்சிகள் வழங்கப்படும்.

மேற்படி பயிற்சி நெறிக்கான விண்ணப்ப முடிவு திகதி அடுத்தமாதம் 15 ஆம் திகதி ஆகும்.

மாவட்ட விவசாயப் பயிற்சிப் பாடசாலை உதவி விவசாயப்பணிப்பாளர். ச. சின்னத்துரை இத்தகவல்களைத் தெரிவித்தார். (ஐ–7)

# காரைநகர் சிவன் கோயில் விசேட அறிவித்தல்

சிவநேயர்களே!

காரைநகர் சிவன்கோயில் மகாகும்பாபிஷேகமும் ஐயனார் சிவன் இராஜகோபுர கும்பாபிஷேகமும் 07 - 06 - 98ஆம் திகதி நடைபெற்றதைத் தொடர்ந்து கோயில் நித்திய பூசை, அபிஷேகங்கள், திருவிழாக்கள் யாவும் சிறப்பாக நடைபெற்று வருகின்றன என்பதை தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றோம்.

நித்தியபடி மேளம். பூ, பூமாலை, கோயிலும் வீதிகளும் தினமும் சுத்தம் செய்தல், இரவுக்காவல், பூந்தோட்டம் சீர்செய்தல் போன்றவற்றிற்கான செலவீனங்களை காரைநகர் சிவன் கோயில் திருப்பணிச் சபையினரும், குருக்கள், பரிசாரகர் வேதனங்களை நித்திய பூசை நிதி உதவிச் சபையினரும் வழங்கி வருகின்றார்கள்.

எதிர்வரும் 24 – 12 – 98 ஆம் திகதி ஆரம்பமாகும் திருவெம்பாவை உற்சவத்தினை மிகவும் சிறப்பாக நடத்துவதற்கு வேண்டிய ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றதென்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**ஆ. அம்பலவிமுருகன்**
**மு. சுந்தரலிங்கம்**
ஆதீன கர்த்தாக்கள்

காரைநகர் சிவன் கோயில். (61214)

ஓம் ஸ்ரீ சாயிராம்

# இடமாற்றம்

**சத்தியசாயி இலக்கிய நூலகம் பருத்தித்துறை.**

இதுவரை பருத்தித்துறை இலங்கை வங்கிக் கிளைக்கு அண்மையில் இயங்கி வந்த மேற்படி நூலகம், பருத்தித்துறை பிரதான வீதியில் உள்ள வடபிராந்திய ஸ்ரீ சத்திய சாயிசேவா நிறுவனங்களின் இணைப்புக் குழுவுக்குச் சொந்தமான கட்டடத்துக்கு (முன்னைய பிரதேச செயலர் காரியாலய கட்டடம்) **03 - 12 - 98** வியாழக்கிழமை முதல் மாற்றப்பட்டுள்ளது என்பதைச் சகலருக்கும் அறியத் தருகின்றோம்.

இந்நூலகம் வியாழன், வெள்ளி பொதுவிடுமுறை நாட்கள் தவிர்ந்த ஏனைய நாள்களில் காலை 10.30 மணி முதல் பிற்பகல் 2.00 மணி வரை திறக்கப்பட்டிருக்கும்.

இந் நூலகத்தில் வாசிப்பதற்கும் விற்பனைக்கும் சாயி இலக்கிய நூல்கள் உண்டு.

**நிர்வாகக் குழு,**
**சத்தியசாயி இலக்கிய நூலகம்,**
**பருத்தித்துறை.**

(சி/5739)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர்

## முருகேசு வேலுப்பிள்ளை

சங்க உறுப்பினரும், மட்டுவில் தெற்கு கிராம அலுவலருமாகிய **வே. துரைசிங்கம்** அவர்களின் பாசமிகு தந்தையார்

**முருகேசு வேலுப்பிள்ளை**

அவர்களின் மறைவையிட்டு அன்னாரின் பிரிவினால் துயருறும் குடும்பத்தாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குவதுடன், அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பிரதேச செயலக ஊழியர் நலன்புரிச் சங்க உறுப்பினர்கள்.**

பிரதேச செயலகம்,
தென்மராட்சி, சாவகச்சேரி. (சி-5707)

# பாதாள உலக உறுப்பினர் சரண்

கொழும்பு, டிசெ. 10

கொழும்பு பாதாள உலகக் கோஷ்டியைச் சேர்ந்த றாவல நிஹால் என்பவர் நேற்று முன்தினம் பிற்பகல் பொலீஸ் தலைமையகத்தில் சரணடைந்தார்.

பல்வேறு குற்றச் செயல்களுக்காக நீண்டகாலமாகத் தேடப்பட்டு வந்த இவரைக் கைது செய்வதற்கு கடந்த சில தினங்களாக பொலீஸார் விசேட நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டனர்.

இந்த நடவடிக்கையில் இருந்து தான்தப்பிக் கொள்ள முடியாது என்று தெரிந்த நிலையிலேயே றாவல நிஹால் சரணடைந்தார் என்று சிரேஷ்ட உதவிப் பொலீஸ் மா அதிபர் எம். எச். ஜி. பி. கொட்டகதெனிய தெரிவித்தார். (ஐ 6)

# தொலைபேசி வசதி

சுன்னாகம், நவ 10

வலிகாமம் தெற்கு பிரதேச சபை அலுவலகம் மற்றும் பிரதேச சபைத் தலைவரின் இல்லம் ஆகியவற்றுக்குத் தொலைபேசி வசதி அளிக்கப்பட்டுள்ளது. (ஐ-27)

# வெள்ளத்தில் விறைத்து மரணம்

யாழ்ப்பாணம், டிசெ. 10

வீதியோரத்தில் மழையில் நனைந்து, வெள்ளத்தில் விறைத்து மரணமான ஒருவரின் சடலம் யாழ். ஆஸ்பத்திரியில் நேற்று முன் தினம் ஒப்படைக்கப்பட்டது.

விறைத்த நிலையில் நவாலியில் வீதியோரத்தில் இருந்து மீட்கப்பட்டு யாழ். ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வரப்படுகையில் இடைவழியில் அவர் மரணமானதாகக் கூறப்பட்டது.

சின்னையா விக்னராசா (வயது 39) என்பவரே மரணமானவர் என்றும்—

அவரது சடலம் மரண விசாரணைக்காக யாழ், ஆஸ்பத்திரி சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் — தெரிவிக்கப்பட்டது. (உ-15-139)

# இணுவிலுக்கு 24 மணிநேர மின்சாரம்

யாழ்ப்பாணம், டிசெ. 10

இணுவில் பகுதிக்கான 24 மணிநேர மின்விநியோகம் கடந்த வார இறுதி முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இணுவில் சந்திக்கு அண்மையில் துரை வீதியில் பொருத்தப்பட்டுள்ள ஜெனரேற்றர் மூலமே மின் விநியோகம் வழங்கப்படுகிறது. (இ-7)

# இடர் காலக் கொடுப்பனவு

யாழ்ப்பாணம், டிசெ. 10

தென்மராட்சி கல்விவலயப் பாடசாலைகளில் பணிபுரியும் அதிபர், ஆசிரியர்களுக்கு 97ஆம் ஆண்டு செப்ரெம்பர் முதல் 98ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் வரையான காலப் பகுதிக்கு இடர்காலக்கொடுப்பனவு வழங்கப்படவிருக்கின்றது.

இக்கொடுப்பனவு வழங்க வசதியாக வரவுச் சான்றிதழ் படிவங்களை அலுவலகத்தில் பெற்று பூரணப்படுத்திநாளை வெள்ளிக்கிழமைக்கு முன்பாக ஒப்படைக்குமாறு பாடசாலை அதிபர்களை தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கோரியுள்ளார். (உ-3)

# மினி சூறாவளியால் மரங்கள் சாய்ந்தன

உரும்பிராய், டிசெ. 10

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமைமாலையில் திடீரென வீசிய மினிப் புயற், காற்று உரும்பிராய், ஊரெழு ஆகிய பகுதிகளில் சேதங்களை விளைவித்துள்ளது.

சில இடங்களில் மரங்கள் வேருடன் சாய்ந்துள்ளன, வாழை மரங்கள் முறிந்துள்ளன, சில இடங்களில் வீடுகளின் கூரையிலிருந்த அஸ்பெஸ்டஸ் தகடுகள், தகரங்கள் தூக்கி வீசப்பட்டுள்ளன.

கோண்டாவில் பிரதான வீதியோரமாகப் பல மின் கம்பங்கள் சாய்ந்துள்ளன. (ஐ-154)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அமரர்.

## சின்னத்தம்பி கதிரமலை

| தாயின் மடியில் | இறைவனடியில் |
|---|---|
| **17–04 1924** | **10–11 1998** |

**அந்தியேட்டி:** 10 - 12 – 1998 **வியாழக்கிழமை**

எமது குடும்பத்தின் குலவிளக்காய்த் திகழ்ந்து எம்மையெல்லாம் மேல் நிலைக்கு இட்டுச் செல்லத் தன்னையே உருக்கிய மெழுகுவர்த்திக்கொப்ப உதாரணமாக வாழ்ந்து காட்டிய எமது இல்லத் தலைவன், அன்புத் தந்தை இறைவனடி சேர்ந்த செய்தி கேட்டு உடன் வந்தும் இறுதிச் சடங்குகளின் போதும் உதவிகள் புரிந்தோருக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியோருக்கும், வீட்டுக் கிருத்திய நிகழ்வுகளில் கலந்து கொண்டோருக்கும், ஜேர்மனி, டென்மார்க் ஆகிய நாடுகளில் வசிக்கும் பிள்ளைகளின் இல்லங்களுக்கு நேரில் வந்து அனுதாபம் தெரிவித்தோருக்கும், வெளி நாட்டில் வாழும் பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகளுக்கு எமது குடும்ப குலவிளக்கு இறைவனடி சேர்ந்த செய்தியை 12 மணித்தியாலத்திற்குள் தெரியப்படுத்தியவர்களுக்கும் மேலும் உரிய வேளைகளில் பல வழிகளிலும் உதவிகள் புரிந்த அனைவருக்கும் எமது உளங்கனிந்த நன்றிகள்.

எங்களது அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய பனிப்புல முத்துமாரி அம்மனையும் காலையடி முருகனையும் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும்

மனைவி: **பாக்கியம்,**

பிள்ளைகள்: **தேவிசாரதாம்பாள், ஜெபராஜா, வரதகுலசிங்கம், திவ்வியசிலோன்மணி, செல்வராஜா, காண்டீபன், வசந்தினி.**

மருமக்கள்: **விமலாதேவி, பரமேஸ்வரி, ஜெகதீஸ்வரி, தில்லைநாதன், கலாவதி, சுசிலாதேவி, ஜெகதீஸ்வரன்.**

பேரப்பிள்ளைகள்: **திரு. திருமதி சிவகரன் மோகனராணி, திரு. திருமதி ஆனந்தன் அனுராதா, சபாஷ்கரன், கிருஷ்ணவேணி, அனுறாஜினி, பிரியதர்சினி, திரு. திருமதி ஜெகன் மாலினி, திரு. திருமதி அருள் றாதிகா, குமுதினி, குகதீபன், கார்த்திகா, தர்சியா, திரு திருமதி ராதா விஜிதா, பாலறூபன், திரு. திருமதி குணதீஸ்வரன் காந்திமதி, சிவறஞ்சன், சிவறஞ்சினி, ஜெயாதேவி, உமாதேவி, அசோக், கிருஷ்ணதாஸ், சுபைதா, ஜெனிதா, ஜனமகன், தனுசியா, ஜெயகாந்தன், ஜெயறூபன், நந்தீசன், சியாந்தன், சியாந்தினி**

பூட்டப்பிள்ளைகள்: **திலீபன், திலகஜி, திவ்யா, அபிநயா, ஆதவன்.**

காலையடி,
பண்டத்தரிப்பு. (61077)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## மனித உரிமைகள்

அனைத்துலக மனித உரிமைகள் நாள் இன்றாகும். மனித உரிமைகள் எண்ணிறந்தவை. அவை மீறப்படாமல் பேணப்பட வேண்டும் என்பதற்காகவே ஐக்கிய நாடுகள் சபையில் மனித உரிமைகள் சாசனம் நிறைவேற்றப்பட்டது. ஐ. நா. சாசனத்தில் சபையில் அங்கம் வகிக்கும் நாடுகள் அனைத்தும் ஒப்பமிட்டுள்ளன. அதனால் அந்த நாடுகள் சாசனத்தில் வகுக்கப்பட்ட மனித உரிமைகளைப் பேணக் கடமைப்பட்டுள்ளன.

தனி மனிதனதும் மனித குழுமத்தினதும் ஓர் இனத்தினதும் மொத்தத்தில் மக்களினதும் மனித உரிமைகள் வேறு எவராலும் வழங்கப்படுபவை அல்ல; அவை ஒவ்வொரு மனிதனதும் பிறப்பு உரிமைகள்.

ஐக்கிய நாடுகள் சபையின் அரசியல் மற்றும் சிவில் உரிமைப் பிரகடனம் இனக்குழுமங்களின் உரிமைகளை வலியுறுத்துகிறது. குறிப்பாக தேசிய இனங்கள் தமது பிறப்புரிமையான சுய நிர்ணய உரிமையை அனுபவிக்க உரித்துடையன; என்று வலியுறுத்துகிறது.

இலங்கைத் தமிழர்களின் அரசியல் உரிமைகளை வழங்குவதன் நிமித்தம் மனித உரிமைப் பிரகடனத்தின் மேற் கூறிய அம்சங்களைக் கண்ணெடுத்துப் பார்க்கவும் சிங்களத் தரப்பினர் மறுக்கின்றனர். தமிழர்கள் சுய நிர்ணய உரிமை உடையவர்கள் என்ற கருத்து நிலை அவர்களுக்கு வேம்பாகக் கசக்கிறது. அதனாலேயே போர் ஒன்றை நடத்தித் தமக்கு உகந்த தீர்வு ஒன்றைத் திணிக்க விளைந்தனர்.

அரசியல் அரங்கில் மட்டுமே தமிழ் மக்களின் உரிமைகளை அரசு மறுக்கிறது என்பதல்ல. தமிழன் என்று பிறந்து விட்டதால் அவனின் சாதாரண மனித உரிமைகள் மட்டுமன்றி அடிப்படை மனித உரிமைகள் கூட மீறப்படுகின்றன.

சட்டப் புத்தகத்தில் மனித உரிமைகள் மிக அலங்காரமாகப் பதிக்கப்பட்டுள்ளன; உண்மையே. ஆனால் தமிழர்களைப் பொறுத்தவரையில் அவை வெறும் ஏட்டுச் சுரைக்காய்களே.

போர் மண்ணாக மாறி விட்ட வடக்கு — கிழக்கில் மட்டுமா தமிழ் மக்களின் மனித உரிமைகள் பட்டவர்த்தனமாக மீறப்படுகின்றன? இலங்கையின் எந்தப் பகுதியில் வாழ்ந்தாலும் தமிழனின் மனித உரிமைகள் மீறப்படலாம் என்ற ''வழமை நிலை'' உருவாக்கப்பட்டிருக்கிறது!

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்தில் தமிழர்களினது மனித உரிமைகளும் மீறப்படுவதாக வாய் கிழியக் கத்தியவர்கள் இன்றைய ஆட்சியாளர்கள். ஆனால் இப்போது தமிழ் மக்களின் மனித உரிமைகள் மீறப்படுதலின் பாகை அதிகரித்திருக்கிறது என்பதனை மறைக்க முடியாது. அது திறந்து விடப்பட்டுள்ள வீட்டின் நிலையிலுள்ளது.

தமிழ் மக்களின் அன்றாட வாழ்க்கைக்குக் குந்தகம் விளைவிக்குமளவுக்கு மனித உரிமை மீறல் ஓங்கி வளராது தடுக்கவேனும் அரசு வழி செய்ய வேண்டும். கவனத்தில் கொள்ளுமா?

# மனித பெறுமானங்களை மதிக்கும் புதிய சர்வதேச சாசனம் அவசியம்

**சர்வதேச மனித உரிமைகள் தினம் இன்றாகும். அதனை ஒட்டி இக்கட்டுரை பிரசுரமாகின்றது**

**சரோஜா சிவச்சந்திரன்**

ஐம்பது வருடங்களின் முன், இரண்டாம் உலக யுத்தம் முடிவடைந்து, நியூரன்பேக் மன்றங்களில் யுத்தக் குற்றவாளிகளுக்கான வரையறை, அவர்களது கட்டுப்பாடு, சட்டப் பொறுப்புக்கள் பற்றிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட நேரம், இரண்டாம் உலக யுத்தத்தில் நடந்த அனர்த்தங்கள் இனி எப்போதும் நடைபெறாது. (Never again) என உலக சமுதாயம் அடித்துக் கூறியது. உலகில் எந்த ஒரு பகுதியிலும் வாழும் மனித இனம் யாராக இருப்பினும் அவர்களது உரிமைகள் எப்போதும் மதிக்கப்படும் என்றனர். உலக நாடுகளின் அரசாங்கங்கள் தாம்இவ்வாறான மனித உரிமைகளை மதித்து தத்தம் மக்களுக்கு இவை பற்றிய பாதுகாப்பையும், அறிவையும் வளர்ப்பதாகக் கூறின. ஆனால் 50 வருடங்கள் கடந்து விட்டன. ஆனால் மனித உரிமைகள் பற்றிய சர்வதேச பிரகடனம் – உலகில் நன்கு பாதுகாக்கப்பட்ட ஓர் இரகசியம் என வர்ணிக்கப்படுமளவிற்கு உள்ளமை வருந்தத்தக்கது.

''மீண்டும் நடவாது'' என உறுதியளித்த நாடுகளில் இனப்படுகொலைகள், இன அழிப்புக்களையும், போர் வன்முறைகளையும் காண முடிகிறது.

உலகில் பாதிக்கு மேற்பட்ட நாடுகளில் மக்கள் மத நம்பிக்கை, இனம், பால் ரீதியான வகைகளில் சிறைச்சாலைகளில் அடைபட்டு அல்லற்படுகின்றனர். பல நாடுகளில் சிறைக்கூடங்கள் வதை கூடங்களாக உள்ளன. பலருக்கு அடிப்படைப் பொருளாதார சமூக உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளன. பல நாடுகளில் சமூக நல வாய்ப்புக்கள் மக்களுக்கு மறுக்கப்படுகின்றன. கல்வி, சுகாதாரம். சமூக பாதுகாப்பற்ற நிலை மட்டுமல்ல, பலர் பட்டினியாலும் வாடுகின்றனர்.

1991 ஆம் ஆண்டில் வளைகுடா யுத்தம் முடிவடைந்ததும், உலக மக்கள் சமூகத்தில் ஓர் அடிப்படை மாற்றம் ஏற்பட்டது.

ஒரு புதிய சர்வதேச மனிதாபிமான ஒழுங்கு உலக சமூகத்தில் தோன்றியமை மனித உரிமை பேணலில் ஓர் விழிப்புணர்வை ஏற்படுத்தியது மட்டுமன்றி சமாதானம் ஜனநாயகம் என்ற அத்தியாயத்தில் பலமான தகவல் புரட்சி ஒன்றை உருவாக்கியது,

1945 இன் பின்னர் 'மீண்டும் நடவாது' என்று கூறப்பட்ட கொடூர சம்பவங்களை இன்று சர்வதேச சமூகம் தொலைக்காட்சியில் பார்த்து வாளாவிருகின்றது. முன்னைய யுகோஸ்லாவியாவில் நடந்த படுகொலைகள் நடந்த இன அழிப்பு சம்பவங்கள், ஆப்கானிஸ்தானில் சிக்கிய மக்கள் படும் அவலங்கள், கிழக்கு திமோரில் ஆட்சியாளர்களால் பெண்கள் படும்

(8 ஆம் பக்கம் பார்க்க )

# யாழ். ஆஸ்பத்திரி தாதியர் விடுதியில் அடிப்படை வசதிகள் குறைந்த நிலை!

## அதனால் அவர்களின் சேவைபாதிப்பு

**யாழ். நகரச் செய்தியாளர்**

பல ஆண்டுகளுக்கு முன்னர், வடபகுதி மக்கள் அனைவரினதும் பிரதான வைத்திய சாலையாக -பெரிய ஆஸ்பத்திரியாக – விளங்கியது யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலை. இப்போது அது குடாநாட்டு மக்களுக்குச் சிகிச்சை அளிக்கும் ஆஸ்பத்திரியாகவே செயற்படுகிறது. சுமார் 1,150 படுக்கைகள் கொண்ட ஆஸ்பத்திரி கணிசமான அளவில் செயற்படுவதற்குத் தங்கும் வசதிகள் செய்யப்படவில்லை. வசதிக் குறைவுகள் மருந்துப் பற்றாக்குறை தொடக்கம் வார்டுகளில் உள்ள மலசலகூடங்கள் துப்புரவாக இல்லாத நிலை வரை நீளும்.

நோயாளருக்குச் சிகிச்சை அளிப்பதற்கான வசதிகள் முழு அளவில் இன்னும் இல்லை என்பது பிரதான விவகாரமாக இருக்க —

வைத்தியசாலையில் பணி புரியும் அலுவலர்களுக்கான வசதிகளும் மிகவும் கட்டையாகவே உள்ளன. அவற்றில் ஒன்றுதான் தாதிய உத்தியோகத்தரின் வசதிக்குறைவுகள்.

தாதிய உத்தியோகத்தர் அடிப்படை வசதிகள் முழுமையற்ற நிலையில் பல சிரமங்களை அனுபவித்தே பணி புரிந்து வருகின்றனர்.

யாழ். பெரிய ஆஸ்பத்திரியில் ஆகக் குறைந்தது 400 தாதிய உத்தியோகத்தர்கள் கடமை புரிய வேண்டும். ஆனால் இப்போது 238 தாதிய உத்தியோகத்தர்கள் மாத்திரமே சேவை ஆற்றுகின்றனர்.

ஆளணியினர் பற்றாக்குறையான நிலையில் பணிபுரியும் இத்தாதியர்கள் தமது கடமை நேரத்தை விட மேலதிக நேரத்திலும் வேலை செய்ய வேண்டிய கட்டாய நிலைப்பாடு உண்டு. கடமையைக் கருத்திற் கொண்டு மேலதிக

**செய்தி மடல்**

வேலை செய்யும் பல தாதியர்கள் தமது கடமையை முடித்துக் கொண்டு சொந்த வீடுகளுக்குத் தற்போதைய கால வேளையில் செல்ல முடியாதுள்ளது.

நேர அவகாசமின்மை, பிரயாண வசதிக் குறைவுகள் போன்ற பல காரணங்களால் இவர்கள் விடுதியில் தங்கி நின்றே கடமையைத் தொடருகின்றனர்.

கணிசமான எண்ணிக்கையான தாதியர்கள் தங்கி நின்று பணிபுரியவென தாதியர் விடுதி ஒன்று ஆஸ்பத்திரியில் உண்டு. ஆனால் அந்த விடுதி, தாதியர்கள் தங்கி நின்று சிரமமின்றித் தமது பணிகளைச் செய்யத் தடங்கலாக உள்ளது துரதிர்ஷ்டமே.

1995 ஒக்ரோபரில் வந்த இடம் பெயர்வுக்கு முன்னர் யாழ். போதனாவைத்திய சாலையில் இருந்த தாதியர் விடுதிகளில் ஒன்று வைத்திய சாலை மீள இயங்கத் தொடங்கிய பின்னர்— 1996 மே மாதத்திற்குப் பின்னர்— பாதுகாப்புக் கருதி இயங்க முடியாது கைவிடப்பட்டுள்ளது.

அதன் காரணமாக தற்போது ஒரே ஒரு விடுதி மட்டுமே பாவனையில் உள்ளது. அங்கும் இரண்டு அறைகளை மட்டுமே பயன்டுத்தக் கூடிய நிலை. மேலும் ஓர் அறையில் ஆறுபேர் மாத்திரமே தங்கக் கூடிய வசதியுடையதாகவே இந்த இரண்டு அறைகளும் உள்ளன. இவை தான் மேலதிக நேரக் கடமை புரியும் சகல தாதியருக்கும் தஞ்சம் அளிக்கிறது.

**அடிப்படை வசதிகள் குறைவு**

விடுதியில் தங்குபவர்களுக்கு வேண்டிய உணவைத் தயாரிப்பதற்கான சமையலறை இல்லாத நிலையும் குறிப்பிடப்படவேண்டிய ஒன்றாகும். அத்தோடு வசதிக்குறைவுகளுடன் கூடிய மலசல கூடங்கள. அவற்றையும் முழுமையாக, முழுநேரமும் பாவிக்கக் கூடியதான நீர் வசதி இல்லை. குறிப்பிட்ட நேரத்தில் மட்டுமே நீர்விநியோகம் மேற்கொள்ளப்படுகின்றது.

இத்தனைக்கும் விடுதியில் நிரந்தரமாகத் தங்கிப் பணி புரியும் தாதியர்களுக்கு 300 ரூபா வீதம் வாடகைப் பணம் ஒழுங்காக அறவிடப்படுகின்றது.

விடுதியில் தங்கியிருக்கும் தாதியர்களுக்கு, உள்ளகத் தொலைபேசி வசதி இன்னும் செய்யப்படவில்லை. வார்ட்டுகளில் இருந்து, விடுதியில் தங்கும் தாதியர்களுக்கு ஏதும் அவசர அழைப்பு விடுக்கப்படும் வேளையில், தொலைபேசி வசதி இல்லாமையால் ஆள்களை அனுப்பியே கருமங்களை ஆற்ற வேண்டியதாக உள்ளது.

தாதியர் விடுதியில் தங்குபவர்களுக்கு தளபாடவசதிகளும் மிகக்குறைந்த பட்சமே உள்ளன. அத்தோடு, கருத்தரங்குகள், ஆலோசனைக் கூட்டங்கள் நடத்தவென விடுதியில் மண்டப வசதிகள் எதுவும் இல்லை. தாதியர்களுக்குக் கருத்தரங்கு எதுவும் நடத்துவதானால் தாதியப் பயிற்சிப்பாடசாலை மண்டபத்தையே நாடவேண்டும்.

ஆண் தாதியர்கள் தங்குவதற்கு விடுதி எதுவும் இதுவரை அமைக்கப்படவில்லை. தங்குவதற்கோ அல்லது உடை மாற்றுவதற்கோவசதியற்ற முறையில் பெரும் சிர

(8 ஆம் பக்கம் பார்க்க)

## சாயி சிந்தனை

நீங்கள் எதைச் செய்தாலும், அதுவே அன்பு என்று கருதுங்கள். ஒவ்வொரு சொல்லையும் மந்திரமாக மாற்றுங்கள். ஒவ்வொரு சொல்லையும் தெய்வீகமாக மாற்றுங்கள். ஒவ்வொரு இடத்தையும் கோவிலாக மாற்றுங்கள். மனிதனும் கடவுளும் வெவ்வேறு அல்லர். மக்கள், தனி சீவன் புதிதாக தோன்றியது என்றும், இறைவன் பழைமையானவர் என்றும் நினைக்கின்றனர். இத்தகைய வேறுபாடு விஞ்ஞானத்தால் உருவாக்கப்பட்டது. The Sp!it of Love is Science அன்பைக் கூறுபடுத்துவது விஞ்ஞானம். The Spirit of Love is God அன்பின் முழு உணர்வே கடவுள். அன்புடனே, அன்பு மட்டுமே நிறைந்து சமூகத்தினுள் சென்று செயற்படுங்கள்.

(ஆதாரம் : சாயி அருளமுதம்)

## நாளை

**கார்த்திகை 25**

**வெள்ளிக்கிழமை**

திதி: அட்டமி பிற்பகல் 4.16 வரை.

நட்சத்திரம்: பூரம் முற்பகல் 7.33 வரை

சுபநேரம்: 6.19– 7.49

ராகுகாலம்: 10.49-12.19

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## உதயவாக்கு

நீ அறிவு பெற்றிருந்தால் அந்தச் சுடரில் மற்றவர்களும் தங்கள் விளக்குகளை ஏற்றிக் கொள்ளட்டும்.

- புல்லர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒட்டுசுட்டானில் சிக்குண்ட குடும்பங்கள் வவுனியாவுக்கு

## முதல்தொகுதியினர் செவ்வாய் இரவு வருகை

வவுனியா, டிசெ. 10

கடந்த வாரம் படையினரால் கட்டுப்பாட்டில் கொண்டுவரப்பட்ட ஒட்டுசுட்டான் பகுதியில் தங்கியுள்ள 214 குடும்பங்களைச் சேர்ந்த 689 பேரையும் வவுனியா நகருக்கு அழைத்துவர முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஒட்டுசுட்டானில் தங்கியுள்ளவர்களின் பெயர் விவரங்கள் அடங்கிய பட்டியல் வவுனியா அரசஅதிபர் கே. கணேஷிடம் படை அதிகாரிகளால் வழங்கப்பட்டுள்ளது.

இந்தப் பட்டியலை அவர் முல்லைத்தீவு அரசஅதிபருக்கு அனுப்பவிருக்கிறார்.

அதே நேரம்—

அங்குதங்கியுள்ள689பேரையும் தொகுதி தொகுதியாக வவுனியாவுக்கு அழைத்துவர ஏற்பாடாகியுள்ளது என்றும்—

முதற் கட்டமாக 164 பேர் நேற்று முன்தினம் இரவு வவுனியாவுக்கு அழைத்து வரப்பட்டனர் என்றும்— வவுனியா செயலக அதிகாரிகள் தெரிவித்தனர். (ஐ-3-164)

## நுண்கலைப்பீட அனுமதி

### சமூகமளிக்கத் தவறியோருக்கு மீண்டும் நேர்முகப்பரீட்சை

யாழ்ப்பாணம், டிசெ. 10

யாழ்.பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைப்பீடத்துக்கு விண்ணப்பித்து இதுவரைசெயல்முறைப்பரீட்சை, நேர்முகப்பரீட்சை ஆகியவற்றுக்கு சமூகமளிக்காத மாணவர்களுக்கு விசேட பரீட்சைகள் எதிர்வரும் சனிக்கிழமை நடைபெறவுள்ளன.

இராமநாதன் நுண்கலைப்பீடத்தில் இசைமாணி, நாட்டியமாணி, இசைக்கலைமணி, நாட்டியகலைமணி ஆகிய கற்கை நெறிகளுக்கு புதிய மாணவர் அனுமதிக்கப்பட்டுள்ளனர். எனினும் போக்குவரத்துப் பிரச்சினைகள் காரணமாக தென்பகுதியில் இருந்து நேர்முகப்பரீட்சை, செயல் முறைப்பரீட்சை ஆகியவற்றுக்கு சமுகமளிக்க முடியாத மாணவர்களின் நலன் கருதியே மீண்டும் இப்பரீட்சைகள் நடைபெற உள்ளன. (ஐ-9)

## கொழும்பில் புலிகளின் இரகசிய தகவல் மையமாம்

கொழும்பு, டிசெ. 10

விடுதலைப் புலிகளின் இரகசிய தகவல் மையம் ஒன்று கொழும்பில் இயங்கி வருவதாகப் புலனாய்வுத் துறையினர் தெரிவித்துள்ளனர்.

வன்னியில் உள்ள மத்திய நிலையத்துடன் தகவல்களைப் பரிமாறிக்கொள்ள இந்த மையத்தை விடுதலைப் புலிகள் பாவித்து வருவதாகவும்—

சாதாரண தொலைத் தொடர்புவசதிகளை இந்தத் தகவல் பரிவர்த்தனைக்குப் பாவிப்பதை அவர்கள் தவிர்த்துள்ளனர் என்றும்— புலனாய்வுத்துறையினர் தெரிவித்துள்ளனர்.

அண்மையில் கைது செய்யப்பட்ட ஒருவர் மூலம் இத் தகவல்கள் தெரியவந்துள்ளது என்று புலனாய்வுத் துறையினர் மேலும் தெரிவித்துள்ளனர். (ஐ-3-164)

## வருடாந்த கலை விழா

வடமராட்சி, டிசெ. 10

நெல்லியடி மெதடிஸ்த மிஷன் பாடசாலை வருடாந்தக் கலைவிழா எதிர்வரும் சனிக்கிழமை அதிபர் வ. கணேசமூர்த்தி தலைமையில் நடைபெறும்.

இவ்விழாவில் திருமதி இந்திராணி பாஸ்கரனின் புலமைப் பரிசில்சள் 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு வழங்கப்படும். (ஐ-173)

## 10 பயனாளிகளுக்கு

## முட்டை அடைவைக்கும் கருவிகள் வழங்கப்பட்டன

உரும்பிராய்,டிசெ. 10

வலி. கிழக்குப் பிரதேசத்தைச் சேர்ந்த 10 பயனாளிகளுக்கு, குஞ்சு பொரிக்கும் கருவிகள் இலவசமாக வழங்கப்பட்டன.

வலி. கிழக்கு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் தலைமையகத்திறப்பு விழா, அதன் தலைவர் க. சிவபாதசேகரம் தலைமையில் நீர்வேலியில் நடைபெற்றபோது, இவை வழங்கப்பட்டன.

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித்திட்டநிறுவனத்தின்அன்பளிப்பான இக்கருவிகளை அதன் யாழ்.மாவட்ட நிகழ்ச்சித்திட்டமுதன்மை முகாமையாளர் திருமதி ஜி. சிவபாத சுந்தரம், அந் நிறுவனத்தின் சார்பில் வழங்கினார். ஒவ்வொரு பயனாளிக்கும், தலா 65 முட்டைகள் பொரிக்க வைக்கக் கூடிய இரண்டு கருவிகள் வீதம் அன்பளிப்புச் செய்யப்பட்டன.

இவற்றின் பெறுமதி 17 ஆயிரம் ரூபாவாகும். இப் பயனாளிகளுக்கு இக்கருவிகளைப் பயன்படுத்துவது பற்றிய பயிற்சி இந்நிறுவனத்தினால் வழங்கப்படும். (ஐ-154)

## மீனவரை இனங்காண படகுகளில் வர்ணக்கொடி

குடாக்கடலில் மீன்பிடிக்கும் மீனவர்களை இனங்காண வசதியாக குருநகர், பாஷையூர், கொழும்புத்துறை மீனவர்கள் மீன் பிடிக்கச் செல்லும் போது தமது மீன்பிடி வள்ளங்களில் தமக்கென ஒதுக்கப்பட்ட நிறக்கொடிகளை ஏற்றிச் செல்லவேண்டும் என படையினர் பணித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குருநகர் மீனவர்கள் மஞ்சள் நிறக்கொடிகளையும், பாஷையூர் மீனவர்கள் சிவப்பு நிறக் கொடிகளையும், கொழும்புத்துறை மீனவர்கள் நீல நிறக் கொடிகளையும் தமது வள்ளங்களில் பறக்கவிடவேண்டும் என இராணுவத்தினர் பணித்துள்ளதாக மீனவர் சங்கங்கள் தெரிவித்தன. (ஐ-51)

## ஒழுங்கைகளில் வெள்ளம்; போக்குவரத்துத் தடங்கல்

உரும்பிராய், டிசெ. 10

அண்மைக் காலத்தில் தொடர்ந்து பெய்து வரும் கடும் மழையினால் உரும்பிராய்ப் பகுதியில் மக்களின் போக்குவரத்து வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

பிரதான வீதி தவிர்ந்த, ஏனைய வீதிகள், ஒழுங்கைகளில் வெள்ளம் நிரம்பியுள்ளமையே, இதற்குக் காரணமாகும்.

கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக, இவை புனரமைக்கப்படாததனால், குண்டும் குழியும் நிறைந்துள்ளன. இவற்றுள் இப்போது வெள்ளம் நிறைந்துள்ளது. போக்குவரத்துச் செய்வோர் எங்கே குழிகள் உள்ளன எனத் தெரியாமல் தடக்கி விழ நேரிடுகிறது.

வலி.கிழக்குப் பிரதேச சபைக்கு, இவ்வாண்டும் கட்டு நிதி வந்ததனால் இவ்வீதிகள், ஒழுங்கைகள் புனரமைக்கப்படவில்லை. (ஐ - 154)

## யாழ். ஆஸ்பத்திரி....

(7 ஆம் பக்கத் தொடர்)

மங்களைத் தாம் அனுபவிக்க வேண்டியுள்ளதாக ஆண் தாதியர் தரப்பில் கவலை தெரிவிக்கப்படுகிறது.

தாதியர் விடுதியில் உள்ள வசதிக் குறைவுகள் குறித்து நிர்வாகத்துடன் பல தடவைகள் தொடர்புகொண்டும் எந்தவொரு பரிகார நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்று தாதியர்கள் மனத்தாங்கலாக உள்ளனர்.

கொழும்பில் இருந்து வருகை தந்த சுகாதார அமைச்சின் பல பிரதிநிதிகள், மற்றும் தலைமைப்பீட உயர் அதிகாரிகளிடம் இது பற்றி முறையிட்டும், பயன் எதுவும் கிடைக்கவில்லை என்று சுட்டிக்காட்டப்படுகிறது, வைத்தியசாலை நிர்வாகம் இது தொடர்பான குறைபாடுகளை நிவர்த்தி செய்வதாக உறுதியளித்தும் செயல்வடிவில் பயன் எதுவும் கிடைக்கவில்லை. அதனால் தாம் புறக்கணிக்கப்படுகிறார்களோ என்ற கருத்துநிலை தாதிய உத்தியோகத்தர் மத்தியில் உண்டாகியுள்ளது.

இத்தனைக்கும் மத்தியில் தற்போது மேலும் சில புதிய தாதிய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

எனினும் அவர்களுக்கு தங்குமிட வசதிகள் எதுவும் செய்து கொடுக்கப்படவில்லை.

தாதியரின் அடிப்படை வசதிகள் நிறைவுசெய்து கொடுக்கப்படாத பட்சத்தில் யாழ். போதனாவைத்தியசாலையில் தாதியரின் பணிகள் படிப்படியாக ஸ்தம்பிதமடையக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது நோயாளர்களுக்குப் பல சிரமங்களை உண்டாக்கும் என்பதனைக் கருத்தில் கொண்டு [illegible] நிர்வாகம் தனது கவனத்தைச் செலுத்த வேண்டும். ★

## நாட்டில் 70 ஆயிரம் மனநோயாளர் உள்ளனர்

கொழும்பு, டிசெ. 10

நாட்டில் சுமார் 70 ஆயிரம் மனநோயாளர்கள் உள்ளனர். சிகிச்சைக்காக மனநோயாளர் வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டவர்கள் அவர்களது உறவினர்களால் கைவிடப்பட்ட நிலையில் உள்ளனர்.

கொழும்பு மாவட்ட பொதுமக்கள் ஐக்கிய முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் பேர்னாட் சூரே நாடாளுமன்றத்தில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மனநோயாளர்களை ஒதுக்கும் மனப்பான்மையை விடுத்து அவர்களைக் குணப்படுத்த முயற்சிப்பது அவசியம். நாட்டிலுள்ள ஆஸ்பத்திரிகளில் மனநோய் சம்பந்தப்பட்ட பிரிவுகளுக்கு பயிற்சி பெற்ற போதிய டாக்டர்கள் இல்லை. இத்துறையில் பயிற்சிபெற டாக்டர்கள் முன்வருவதும் இல்லை. இந்த நிலை மாறவேண்டும்—என்றும் அவர் தெரிவித்தார். (ஐ-10)

## யாழ். பல்கலைக்கழகத்தில் தமிழ் இலக்கிய ஆய்வு

யாழ்ப்பாணம், டிசெ. 10

இரண்டாயிரத்து 500 ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழ் இலக்கியம் தொடர்பான சான்றுகள் சிங்கள இலக்கியங்களில் உள்ளனவா என்பது தொடர்பான ஆய்வு ஒன்று யாழ். பல்கலைக்கழகத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தமிழ் இலக்கியங்கள் தொடர்பான சான்றுகள் பல்வேறு விதங்களில் பெறப்பட்டுள்ளன. அதுபோல் சிங்கள இலக்கியங்களில் தமிழ் இலக்கியச் சான்றுகள் உள்ளனவா என்பது தொடர்பாக ஆய்வுகள் எவையும் பெரிய அளவில் மேற்கொள்ளப்படவில்லை. ஆனால் சிங்கள இலக்கியங்களில் தமிழ் இலக்கிய வரலாறு தொடர்பான சான்றுகள் இருப்பதாக கூறப்பட்டு வருகின்றது.

இதனைக் கருத்திற் கொண்டு சிங்கள இலக்கியங்களில் தமிழ்ச் சான்றுகள் தொடர்பான ஆதாரங்களைத் தேடும் பணி யாழ். பல்கலைக்கழகத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழகத்தில் உள்ள சிங்கள விரிவுரையாளர்களின் துணையுடன் பல்கலைக்கழக வரலாற்றுத் துறை இந்த ஆய்வை மேற்கொண்டு வருவதாக அவர் தெரிவித்தார். (ஐ-9)

## மனிதபெறுமானங்களை..,

(ஏழாம் பக்கத் தொடர்)

இன்னல்கள், ஏன்! இலங்கையில் நாளாந்தம் நிகழும் கைதுகள், காணாமற் போவோரின் நிலைமைகள் யாவும் இன்று மனிதர் பார்த்து ரசிக்கும் 'காட்சி' களாகி விட்டன,

புதிய மனிதாபிமான ஒழுங்கமைப்பினால் இவ்வாறான படுகொலைகளைத் தடுக்க ஏன் முடியவில்லை?

நிச்சயமாக முடியாது. ஏனெனில் இப்போர்கள் அதிகார அரசியல் மையத்தன்மை கொண்டிருந்த போதிலும், உள்ளூர் அரசியல் அம்சங்களின் தாக்கம் மிக ஆழமாகப் பதிந்துள்ளன என்பதை யாரும் மறுக்க முடியாது. உள்ளூர் அரசியல் விவகாரங்கள் ஒவ்வொரு நாடுகளிலும் அந்நாடுகளின் இன, மத வேறுபாடுகளுக்கு ஏற்பவெவ்வேறு வடிவங்களில் இடம் பெறுகின்றன. பொஸ்னியா, றுவாண்டா போன்ற நாடுகளில் ஏற்பட்ட போராட்டங்கள் இன அழிப்பிற்கான போராட்டமாக அமைந்ததைக் காணமுடிகிறது.

போரினால் பாதிக்கப்படுபவர்கள் அவர்கள் எடுக்கும் நடவடிக்கைகள் யாவும் சட்டத்தின்கண்களுக்கு சரியாகத் தெரிவதில்லை. பாதிப்புக்கு உள்ளானோர் பலர் தமது பாதிப்பின் தாக்கங்களை வெளியில் கூறுவதற்கு தயங்குகின்றனர். பல குற்றங்களுக்கு பொறுப்பேற்கும் அரசுகள் கூட அமைதியாகி விடுகின்றன. சட்ட நூல்களில் ஆதாரங்களை அலசிப்பார்க்கும் சந்தர்ப்பங்களும் அருகி வருகின்றன. மக்களை பாதுகாதக்கும் சட்டங்களால் கூட நியாயங்களை சரிவரப் புரியாத நிலை, நாடுகளில் மனித உரிமை மீறல்கள் பற்றிய ஆழமான ஆய்வுகள் செய்யப்படாமை - இவை யாவும் மனித உரிமைகள் தொடர்பான சர்வதேசபிரகடனத்தில் கூறப்பட்ட விதிகளுக்கு சவாலாக அமைகின்றன,

50 வருடங்களின் பின் இன்று மனித உரிமைகள் தொடர்பாக மனித உரிமைகளை நிலைநாட்டும் நிறுவனங்கள் பல செயற்பாட்டில் விழித்துக் கொண்டுள்ளன.

1948 இல் எடுக்கப்பட்ட உறுதி மொழிகள் நிலைநிறுத்தப்படவேண்டும் என அரசுகளை வற்புறுத்துகின்றனர். சில நாடுகளில் மக்கள் சமமான சுதந்திரம், பேச்சு உரிமை, ஒன்றுகூடல் சுதந்திரம் போன்ற உரிமைகளில் ஏதாவது ஒன்றுக்காக குரல் கொடுக்கும் போது அவர்கள் கைது செய்யப்படுகின்றனர். அது மட்டுமன்றி அவர்கள் இறக்கும் வரை கொடுமைப் படுத்தப்படுகின்றனர். தொழிற் சங்கங்கள் சம்பள உயர்விற்காக குரல் கொடுக்கின்றன; கேட்பவர்கள் சிறையில் அடைக்கப்படுகின்றனர். விவசாயிகள் தாம் பயன்படுத்தும் சிறு நிலத்துண்டை சொந்தமாக்க முனையும் போது பயமுறுத்தப்படுகின்றன; கைதுசெய்யப்படுகின்றனர்; பெண்கள் அதிகாரிகளுக்கு பணிய மறுத்தால் பலாத்காரப்படுத்தப்படுகின்றனர்; பாதிக்கப்பட்டவர்களுக்காக வாதிடும் சட்டத்தரணிகள் கைது செய்யப்படுகின்றனர்; மேலாக இவற்றை எதிர்த்து எழுதும் பத்திரிகையாளர்கள் கூட கொலை செய்யப்படுகின்றனர்.

ஆகவே 1948 இல் ஏற்படுத்தப்பட்ட மனித உரிமைகள் சர்வதேச பிரகடனம் 'ஓர் இரகசிய பிரகடன' மாக அன்றி செயலளவில் அமைவது அவசியம். குறைபாடுகளைக் கொண்ட இப்பிரகடனம் பல நாடுகளின் கண்டனத்துக்கும் விமர்சனத்துக்கும் உள்ளாகியது; மட்டுமன்றி பல நாடுகள் இப் பிரகடனத்தை சார்பாகக் கொண்டு தத்தமது நாடுகளுக்கேற்ற மனித உரிமைகள் சாசனத்தை ஏற்படுத்தியுள்ளன. ஆகவே மனித உரிமைகளின் சகல அம்சங்களையும் உள்ளடக்கிய, மனித பெறுமானங்களை மதிக்கக்கூடிய, உலக மக்கள் எல்லோரையும் ஒன்றிணைக்கக்கூடிய, ஒரு செயற்பாட்டை கட்டியெழுப்பும் அத்திவாரத்தை அடிப்படையாகக் கொண்ட மனித உரிமைகள் சாசனமே இன்றைய, நாளைய தேவையாகும். ★

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் நல்லூர் பொது நூலகம்

# இன்றிலிருந்தாவது மனித உரிமை பேண அரசு நடவடிக்கை எடுக்கட்டும்

## புளொட் அறிக்கை

யாழ்ப்பாணம், டிசெ. 10

தமிழ்மக்களின் வாழ்விடம், சமூக உரிமைகள், அடிப்படை மனித உரிமைகள். பொருளாதார கலாசார கல்வி உரிமைகள், பாதுகாப்பாக வாழும் உரிமை என்பன இந்நாடு சுதந்திரம் பெற்ற நாளில் இருந்து மீறப்பட்டு வந்திருக்கின்றன.

மனித உரிமை தினமான இன்றில் இருந்து இந்த மனித உரிமைகள் மீறாமல் பாதுகாக்க அரசு திடசங்கற்பம் பூணவேண்டும்.

புளொட் அமைப்பின் உப-தலைவர் என். மாணிக்கதாசன் மனித உரிமைகள் தினத்தையொட்டி விடுத்துள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஒருநாட்டில் வாழும் சகல இன மக்களின் அடிப்படை உரிமைகளையும் பாதுகாத்து மதிக்கவேண்டியது அந்த நாட்டை ஆட்சி செய்யும் ஆட்சியாளர்களின் கடமையும் பொறுப்புமாகும்.

1948 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 10 ஆம் திகதி ஐ. நாவில் மனித உரிமைகள் பிரகடனம் அங்கீகரிக்கப்பட்டு வெளியிடப்பட்டது. இந்தப் பிரகடனத்தை இலங்கையும் ஏற்றிருந்தது. அந்தப் பிரகடனம் 50 ஆவது ஆண்டை நிறைவு செய்யும் இந்நிலையில் எமது நாடும் சுதந்திரம் பெற்று 50 ஆவது ஆண்டை நிறைவு செய்துள்ளது. ஆனால் எம்நாட்டில் மனித உரிமைகள் பேணப்பட்டதா என்ற கேள்வி எழுந்துள்ளது.

எவர் எதைக் கூறினாலும் இன்று இந்த நாட்டில் இரு இனங்களுக்கிடையே யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இந்த யுத்தத்தினால் அரசும் — விடுதலைப் புலிகளும் மட்டுமல்ல அனைத்து சமூகங்களும் பாதிக்கப்பட்டுள்ளன. ஆனால் இன்று தமிழர்கள் எல்லோரும் புலிகள் என்ற கண்ணோட்டத்தில் நடத்தப்படுகின்றனர். தமிழ் மக்கள் படும் அவலங்கள் இதற்கு உதாரணங்களாகும். இலங்கை சுதந்திரம் அடைந்த காலத்தில் இருந்து தமிழ் மக்களின் அடிப்படை மனித உரிமைகள் உரிய முறையில் பாதுகாக்கப்பட்டு வந்திருந்தால் இன்றைய யுத்தம் தொடங்கியிருக்கவே மாட்டாது.

இந்த யுத்தத்தின் ஆரம்பத்தில் இருந்து இன்று வரை தமிழ்மக்கள் மீது மனித உரிமை மீறல்கள் கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ளன. வெலிக்கடைச் சிறையில் இடம்பெற்ற மனிதாபிமானமற்ற படுகொலை இதற்கான வாசல் கதவைத்திறந்தது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பெரும் எண்ணிக்கையானவர்கள் காணாமற் போயினர். அண்மைக்காலத்தில் யாழ். மாவட்டத்தில் காணாமற்போன 640 பேர் தொடர்பாக அரசிடமிருந்து பொறுப்பான பதிலேதும் இதுவரை வெளியாகவில்லை.

தமிழ்ப் பிரதேசங்கள் மீது கண்மூடித்தமான விமான, ஷெல் தாக்குதல்கள் தொடர்கின்றன. வவுனியாவில் நலன்புரி நிலையங்கள் எனக் கூறும் சிறைச்சாலைகளில் உள்ளவர்களுக்கு எவ்வித சுதந்திரமும் இல்லை.

செம்மணிப் புதைகுழி தொடர்பாக அனுதாபங்கள் தெரிவிக்கப்படுகின்றதே தவிர ஆக்கபூர்வமான திட்டங்கள் ஏதும் நடக்கவில்லை.

வன்னியில் இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசங்களில் தொடரும் நிவாரண வெட்டினால் ஒரு சோமாலியாவே உருவாகிக் கொண்டிருக்கின்றது — என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-3)

## தராசுகளுக்கு முத்திரையிடல்

கொழும்புத்துறை, டிசெ. 10

கோப்பாய் பிரதேச சபைக் காரியாலயத்தில் இன்று வியாழக்கிழமையும் நாளை வெள்ளிக்கிழமையும் காலை 9.00 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணி வரை நிறுத்தல் அளவை உபகரணங்களுக்கு முத்திரையிடும் பணி நடைபெறும்.

இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இப்பகுதியில் உள்ள சகல சந்தை வியாபாரிகள். கடை உரிமையாளர்கள், பேக்கரி உரிமையாளர்கள், விறகுகாலையைச் சேர்ந்தவர்கள் தத்தமது தராசுப் படிகளுக்கும் நிறுவை, அளவை உபகரணங்களுக்கும் முத்திரையிட்டுக் கொள்ளுமாறு யாழ். செயலக நிறுவை அளவைத் திணைக்களப் பொறுப்பதிகாரி கா. நாகலிங்கம் தெரிவித்துள்ளார். (ஐ-30)


**பிரகாஸ்**
திரை அரங்கு
சண்டிலிப்பாய். (சசிமில்)
10 - 12 - 98 (இன்று)
**10-30** மணிக்கு
அஜித்குமார் - தேவயானி
நடித்த
உயிரோடு உயிராக
**2-30** மணிக்கு
பிரகாஸ்ராஜ் – குஷ்பு
நடித்த
குரு பார்வை
(61213)



3, 4, 5 ஆம்
புலமைப் பரிசில் - 99
புதிய வகுப்புகள்
ஆரம்பம்:- 12- 12 - 98
Sat. 8-00 a. m.
★ ஒவ்வொரு வகுப்புக்கும் முதல் 25 மாணவர்களுக்கு மட்டும் அனுமதி வழங்கப்படும்.
★ அனுமதிகளை முன் கூட்டியே பெறவும்.
**BOND** யாழ்.நகர்.
(61233)



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
விஞ்ஞான பீடத்தினால்
நடத்தப்படும்
**விஞ்ஞானக் கண்காட்சி**

மேற்படி கண்காட்சி அநேகரின் வேண்டுகோளுக்கு இணங்க 12–12–98 (சனிக்கிழமை) 13–12–98 (ஞாயிற்றுக்கிழமை) ஆகிய நாள்களிலும் முற்பகல் 8.30 மணி முதல் பிற்பகல் 4.30 மணிவரை நடைபெறும்.

11–12–98 (வெள்ளிக்கிழமை) இக் கண்காட்சி நடைபெற மாட்டாது.

யாவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- பதிவாளர்
யாழ். பல்கலைக்கழகம்.

(சி/5763)


# மூதாட்டியைக் கடத்தி நகையை அபகரித்தனர்

யாழ்ப்பாணம். டிசெ. 10

ஆனைக்கோட்டையில் வைத்து கடத்தப்பட்ட 70 வயது மூதாட்டி ஒருவர் அவரிடமிருந்த நகைகள் பறித்தெடுக்கப்பட்ட பின் நவாலியில் விடுவிக்கப்பட்டார்.

கடந்த முதலாம் திகதி கடைக்குச் சென்று வருவதாகக் கூறி வெளியில் சென்ற இப்பகுதியைச் சேர்ந்த திருமதி ஆறுமுகம் இராசம்மா அன்று தொடக்கம் காணாமற் போய் விட்டார்.

நவாலிக்கு இவரைக் கடத்திச் சென்ற திருடர்கள் இவரிடமிருந்த சங்கிலி, காப்பு போன்ற நகைகளைப் பறித்துவிட்டு இடைவழியில் இவரைத் தவிக்க விட்டுச் சென்றனராம்.

வழி தெரியாமல் கடந்த ஒருவாரமாகப் பல இடங்களிலும் அலைந்து திரிந்த இந்த மூதாட்டி நேற்று மதியம் வீட்டுக்கு வந்து சேர்ந்தார்.

இவர் காணாமற் போனது தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழு, யாழ். பொலீஸ் நிலையம் போன்றவற்றில் உறவினர்களினால் முறைப்பாடு செய்யப்பட்டது. (இ-5)

## ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 10

மல்லாகம் விசாலாட்சி வித்தியாசாலையில் இன்று நடைபெறவிருந்த பரிசளிப்பு விழா தவிர்க்கமுடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது என்று வித்தியாலய அதிபர் அறிவித்துள்ளார். (இ–110)

## வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், டிசெ. 10

நாவற்குழி மகா வித்தியாலய 'வணிகதீப' நூல் வெளியீட்டு விழா இன்று காலை 9.30 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும்.

யாழ். பல்கலைக்கழக வணிகத்துறை தலைவர் க. தேவராஜா பிரதம விருந்தினராகவும், வணிகக்கல்வி விசேடபாட அலுவலர் வ. க. பாலசுப்பிரமணியம் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர். (இ-3)

# பாதுகாப்புக்காக என்ற பெயரில் மனிதர்கள் வதைபடுவதை நிறுத்துக

## ஈ. பி. ஆர். எல். எவ். அறிக்கை

யாழ்ப்பாணம், டிசெ. 10

பாதுகாப்பு என்ற பெயரில் எடுக்கப்படும் நடவடிக்கைகளால் மனிதர்கள் வதைக்கப்படும் கொடூரம் எங்கும் நிறைந்துள்ளது. இந்த நிலைமைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்தாக வேண்டும்.

ஈ. பி. ஆர். எல். எவ். செயலாளர் நாயகம் சுரேஸ் பிரேமச்சந்திரன் மனித உரிமை தினத்தையொட்டி விடுத்துள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது–

சமாதானத்தின் பெயராலும், விடுதலையின் பெயராலும் ஈடுபட்டு நிற்கின்ற போரினால் எமது மண்ணில் நிகழும் உயிரிழப்புகள் அளப்பரியன. பாதுகாப்பு என்பதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகளால் மனிதர்கள் வதைக்கப்படும் கொடூரம் அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்துள்ளது. இந்த நிலைமைகளுக்கு முற்றுப் புள்ளி வந்தாக வேண்டும் என்பதில் எவருக்கும் இரு வேறு கருத்துக்கள் இருக்க முடியாது.

இந்த வகையிலேயே உலகப் பெருமன்றமான ஐக்கிய நாடுகள் சபையும் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பாக அடிப்படை மனித உரிமைகள் காக்கப்பட வேண்டுமென வலியுறுத்தும் மனித உரிமைகள் பிரகடனத்தை வெளியிட்டது. டிசெம்பர் 10ஆம் நாள் சர்வதேச மனித உரிமைகளுக்கான தினமாக அறிவிக்கப்பட்டது. இது வெறுமனே ஆண்டு தோறும் கொண்டாடப்படும் ஒரு சடங்கல்ல. பிறப்பின் அடிப்படையில் பாகுபாடு காட்டப்படுதலை எதிர்ப்பதும் தனி மனிதனின் உரிமைகள் பேணப்பட வேண்டுமென்பதை வலியுறுத்துவதும் ஒரு சத்தியப்பிரமாணமாக மேற்கொள்ளப்பட வேண்டியது இப்போது எமது மண்ணில் காலத்தின் கட்டாயமாகும்.

எந்த வகையில் எந்த, வடிவத்தில், எவரால் தனி மனிதர்களின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டாலும் அதனைக் கண்டிக்கும் துணிவும் திராணியும் ஒவ்வொருவருக்கும் ஏற்பட வேண்டும். சமாதானத்துக்கான போர், விடுதலைக்கான போர் என்று பெயர்கள் வேறுபட்டாலும் போர் உயிரிழப்புக்களையும் அழிவுகளையும் மட்டுமே தருகிறது என்பதே யதார்த்தமாகும். போர் என்பது வெறுமனே இரு அணிகள் நடத்தும் விளையாட்டுப் போட்டியல்ல. போர்முனைக்குவெகுதொலைவில் உள்ளவர்களான சாதாரண மக்களும் போரின் விளைவுகளிலிருந்து தப்பிக் கொள்ள முடியாத நிலைமையே நீடித்து வருகிறது. போர் நீடிக்கும் நிலைமையே மனித உரிமைகள் மீறப்படுவதற்கான கவசமாகவும் இருக்கின்றது.

தனி மனிதர்களின் அடிப்படை உரிமைகள் நிலை நிறுத்தப்படுவதற்கு முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும் என்பது மறுக்க முடியாதது. சிறுமை கண்டு பொங்கும் உள்ளமும், அநீதிகளுக்கு எதிரான குரல் எழுப்பும் தென்பும், அடக்குமுறைகளுக்குஅடிபணியாத துணிவும், தனி மனிதர்களின் குண நலன்களாக மலர சர்வதேச மனித உரிமைகள் நாளான இன்றையதினத்தில்ஒவ்வொருவரும் சத்தியப் பிரமாணம் செய்து கொள்வோமாக. ஒவ்வொரு தனி மனிதனதும் அடிப்படை உரிமைகள் உத்தரவாதப்படுத்தப்பட வேண்டிய அதே சமயம் சமூகத்தின் பொது நலனுக்கும் பாதுகாப்புக்கும் அமைதிக்கும் குந்தகம் ஏற்படாத வகையில் செயற்பட வேண்டியது ஒவ்வொருவரதும்கடமையாகும். மனிதர்களை மனிதர்களாக மதிக்கும் பண்புகள் மேலோங்கவும் எந்தப் பெரிய இலட்சியங்களை விடவும் சாதாரண மனிதர்களின் நாளாந்த வாழ்வு முக்கியமானது என்பதை வெளிப்படுத்தவும் மனித உரிமைகள் நாளில் திடசங்கற்பம்பூணுவோமாக. —இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-9)

## பரீட்சை நிலையங்கள் மாற்றம்

யாழ்ப்பாணம், டிசெ.10

எதிர்வரும் 14 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஜி. சீ. ஈ. சாதாரணதரப் பரீட்சையில் யாழ்.வலயம்—2க்கு உட்பட்ட சில பாடசாலைப் பரீட்சை நிலையங்கள் இடம் மாற்றப்பட்டுள்ளதாக கல்விப்பணிப்பாளர் சி. சிவராசா அறிவித்துள்ளார்.

புற்றளை வித்தியாலய மண்டபம்—3 பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலயத்துக்கும்—

நாகர்கோயில் அ.மி.த.க. பாடசாலை மண்டபம், செம்பியன்பற்று அ.த.க. பாடசாலை மண்டபம் ஆகியவை புலோலி மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலைக்கும்—

ஆவரங்கால் நடராஜா இராமலிங்க வித்தியாலய மண்டபம் ஆவரங்கால் மகாஜன வித்தியாலயத்துக்கும்—

இடம்மாற்றப் பட்டுள்ளதாகஅவர் அறிவித்துள்ளார். (ஐ-9)

★ ★ ★

யாழ்ப்பாணம், டிசெ. 10

எதிர்வரும் 14 ஆம் திகதி ஆரம்பமாகவிருக்கும் ஜி.சீ.ஈ. (சாதாரணதர) பரீட்சையில் தீவக வலயத்தில் அமைக்கப்பட்ட இரு பரீட்சை நிலையங்கள் மாற்றப்பட்டுள்ளதாகத் தீவக வலயப் பணிப்பாளர் ப. விக்கினேஸ்வரன் தெரிவித்தார்.

வேலணை கிழக்கு மகா வித்தியாலய நிலையம் வேலணை சரஸ்வதி வித்தியாலயத்துக்கும்—

வேலணை சேர். வைத்திலிங்கம் துரைச்சாமி ம. வி. நிலையம் வேலணை மேற்கு [illegible] கும் — மாற்றப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்தார். (ஐ-3-51)

## தாதியர் பயிற்சிக்கு நேர்முகப் பரீட்சை

கோட்டே ஸ்ரீ ஜெயவர்த்தனபுர தாதியர் பயிற்சிப் பாடசாலையில் பயிற்சி பெறுவதற்காக விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகப் பரீட்சை நேற்று யாழ். போதனா வைத்தியசாலையில் நடைபெற்றது.

இவர்களுக்கான போட்டிப் பரீட்சை எதிர்வரும் 12 ஆம் திகதி யாழ். போதனாவைத்தியசாலை – தாதியர் பயிற்சிப்பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.

பரீட்சைக்கான அனுமதி அட்டை நேர்முகப் பரீட்சையின் முடிவில் அவர்களுக்குக் கையளிக்கப்பட்டது.

பரீட்சைக்கான வினாத் தாள்கள் இன்று கொழும்பில் இருந்து வந்து சேரும் எனத் தெரியவருகிறது. (இ–15)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

**நாவலர்**
கல்வி நிலையம்
ஆனைப்பந்திச் சந்தி,
யாழ்ப்பாணம்.

ஆண்டு 1 முதல்
O/L வரை
புதிய வகுப்புகள்
ஆரம்பம்
12 - 12 - 98
சனி மாலை 3-00மணி.
★ புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
(61234)



எமது புதிய
CD வெளியீடுகள்!

அஜித்குமார் - ரிச்சா
Ⓡ உயிரோடு உயிராக
பிரகாஷ்ராஜ் - குஷ்பு
Ⓡ குரு பார்வை
( பிரமிட் CD )
Ⓡ தேசிய கீதம்
[ பிரமிட் CD ]
Ⓡ கும்பகோணம் கோபாலு
[ பிரமிட் CD ]
Ⓡ சிம்மராசி
[ V. C. - CD ]
Ⓡ வீரம் வௌஞ்ச மண்
[ கவிதா CD ]
Ⓡ புதுநெல்லு புதுநாத்து
[ பிரமிட் CD ]

படப் பிரதி
ஒன்றின் விலை 300/-

**வீடியோ விமல்**
யாழ்ப்பாணம்.
(சி/5765)


## பரிசளிப்பு விழா

சாவகச்சேரி சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலய பரிசளிப்புவிழா இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணிமுதல் அதிபர் மு. பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ளது.

தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் வ.செல்வராஜா முதன்மை விருந்தினராகவும், கோட்டக் கல்விப் பணிப்பாளர் இ. கணேசன், ஓய்வு பெற்ற அதிபர் நீ. மனோகரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும், வைத்திய கலாநிதி பே. பிலிப்ஸ் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்ள உள்ளனர். (ஐ-9)

## விஜயம்

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள தென் ஆபிரிக்க நாடாளுமன்றத் தூதுக்குழு நேற்று நாடாளுமன்றத்துக்கு விஜயம் செய்து நாடாளுமன்ற கூட்ட நிகழ்ச்சிகளை அவதானித்தது.


**SUBRA**
கல்வி நிறுவனம்
சித்தன்கேணி.

A/L 1999, 2000

பொருளியல்
திரு. ஜெயக்குமார்
1999 — செனமதி நிலுவை
2000 — சந்தைச் சமநிலை

கணக்கியல்
திரு. V. S. T. குமரன்
பிரிவு I கிரயக்கணக்கீடு
பிரிவு II கம்பனி

வகுப்புகள்
நடைபெறுகின்றன.
(61217)


## சுமார்...

(முதலாம் பக்கத் தொடர்)

நூறு வீடுகளில் வெள்ளம் புகுந்துள்ளதால் சுமார் 500 பேர் இடம் பெயர்ந்துள்ளனர். இந்தப் பகுதியில் அனேகமான வீடுகள் மண் வீடுகளாதலால் அவை நீரில் ஊறி இடிந்து வீழ்ந்துள்ளன.

திருநெல்வேலி முத்துமாரி அம்மன், சிவன் கோயில்பகுதிகளைச் சேர்ந்த இருநூறு குடும்பங்கள் வெள்ள அபாயம் காரணமாக இடம் பெயர்ந்துள்ளன. இவர்கள் இப்பகுதியில் உள்ள ஆலயங்களிலும் பொது இடங்களிலும் தங்கியுள்ளனர்.

இதேவேளை —

தென்மராட்சிப் பகுதியிலும் பல குளங்கள், சிறு கேணிகள் என்பன நிரம்பி வழிகின்றன. வீதிகள் எங்கும் வெள்ளம் பாய்ந்தோடிய வாறுள்ளது.

தொடர்ந்து பெய்துவரும் மழையினால் நீர்வேலி, கோப்பாய், சிறுப்பிட்டி, கரந்தன் பகுதிகளில் நீர் தேங்கி நிற்பதால் விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது. வெங்காயம், உருளைக்கிழங்கு ஆகிய பயிர்கள் இந்த வெள்ளம் காரணமாக பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளதாக அப்பகுதி விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

(இ-6-7-31-110-139-173)

## 7 பேரைக்...

(முதலாம் பக்கத் தொடர்)

மகன் ஆகியோரைக் கடத்திச் சென்றதும் — தெரிந்தவையே.

தலாவையில் வைத்துப் புலிகளால் கைது செய்யப்பட்ட பாலன் என அழைக்கப்படும் எஸ். பாலசுப்பிரமணியம் என்ற இந்த நபர் விடுதலைப் புலிகளால் தீவிரமாக விசாரிக்கப்பட்டார் என்றும்—

பின்னர் நேற்று முன்தினம் இலுப்படிச்சேனைச் சந்தியில் வைத்து அவருக்கு புலிகளால் மரண தண்டனை வழங்கப்பட்டது என்றும் — தெரிவிக்கப்பட்டது. (இ-3-21)

## கிளாலி...

(முதலாம் பக்கத் தொடர்)

படையினர் நடத்திய இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துக்காக இராணுவம்சார்பாக யாழ். மக்களிடம் தாம் மன்னிப்புக் கோருவதாக அறிக்கையில் அவர் தெரிவித்துள்ளார்.

கிளாலி துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் மூன்று மாதக் குழந்தையும் அக் குழந்தையின் சகோதரனும் உயிரிழந்ததும்—

மற்றொரு சகோதரனும் தாயாரும் காயமடைந்ததும் தெரிந்தவையே.

கிளாலி சம்பவம் துரதிஷ்டமானது இரண்டு அப்பாவி மக்கள் கொல்லப்பட்டது அதிர்ச்சி தருகிறது என்று லொஹான் குணவர்த்தனா தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவத்தில் சம்பந்தப்பட்ட படையினர் சட்டரீதியான நடவடிக்கைக்காக தற்பொழுது பொலீஸாரிடம் கையளிக்கப்பட்டுள்ளனர். இராணுவப் பொலீஸார் இது தொடர்பான விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

இத்தகைய சம்பவங்கள் நடைபெறாது பார்த்துக் கொள்வதில் நாங்கள் அவதானமாக இருக்கிறோம். எப்படி நாம் அவதானமாக இருந்தாலும் இப்படியானவர்களில் ஒரு சிலர் இருக்கத்தான் செய்கின்றார்கள்,

கிளாலியில் பாதிக்கப்பட்ட குடும்பத்துக்கு உதவுவதற்கான நடவடிக்கைகளை நாங்கள் எடுத்து வருகிறோம்.

இந்தச் சம்பவத்துக்காக இராணுவம் சார்பாக யாழ். மக்களிடம் மன்னிப்புக் கோருகிறேன்.

இப்படியான சம்பவங்கள் இனிமேலும் நடைபெறாது பார்த்துக் கொள்வதில் உறுதியாக உள்ளேன்.

இப்படி அவர் தனது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

# யாழ்ப்பாணத்திலேயே நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம், டிசெ.10

1995 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட அரச சேவை எழுதுவிளைஞர் அதனோடு இணைந்த சேவைகள் மற்றும் கூட்டுத்தாபன எழுதுநர் பதவிக்கான போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களில் நாளை மறுதினம் கொழும்புக்கு நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்களுக்கு யாழ்ப்பாணத்திலேயே நேர்முகப் பரீட்சை நடத்தப்படவிருக்கிறது.

புளொட் அமைப்பின் தலைவர் த.சித்தார்த்தன் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்காவுடன் நேற்று நடத்திய பேச்சை அடுத்து யாழ்ப்பாணத்தில் இந்த நேர்முகப் பரீட்சையை நடத்த அமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

போக்குவரத்துப் பிரச்சினை காரணமாக நேர்முகப் பரீட்சைக்குச் செல்ல முடியாத நிலை குறித்து பலர் புளொட் யாழ். மாவட்ட அமைப்பாளர் செ.கிருபைராஜாவிடம் முறையிட்டனர்.

அதையடுத்து அவர் இவ்விடயத்தை த.சித்தார்த்தனுக்கு எடுத்துக் கூறியதை அடுத்து அவர் அமைச்சருடன் பேச்சு நடத்தியதாகத் தெரிவிக்கப்பட்டது.

## சமய சந்நிதியில்

தொல்புரம் கொட்டடியம்பதி அருள்மிகு ஸ்ரீஆதிமுத்து மாரியம்மன் கோயிலில் கார்த்திகை மாதப் பூரத் திருவிழா இன்று நடைபெறும். மாலை 6 மணிக்கு விஷேட அபிஷேகமும் அதனைத் தொடர்ந்து அம்பாள் வீதியுலா வருதலும் இடம் பெறும். (ஐ-9)

★ ★ ★

உரும்பிராய் வடக்கு பேய்ச்சியம்மன் ஆலயத்தில் கார்த்திகை மாத பூரத்தை முன்னிட்டு இன்று வியாழக்கிழமை மாலை 5 00மணிக்கு விசேட பூசையும் ஆராதனையும் இடம்பெறும்.

## கிறிஸ்து பிறப்பு விழா

பாஷையூர் சென். அன்ரனீஸ் றோ. க. ம. வித்தியாலயத்தின் கிறிஸ்து பிறப்பு விழா இன்று காலை 9.30 மணிக்கு வித்தியாலய அதிபர் அ. ஜெயராஜகுலேந்திரன் தலைமையில் நடைபெற உள்ளது.

பாஷையூர் பங்குத் தந்தை அருட்திரு சாள்ஸ் கொலின் கலந்து கொள்வார். கலை நிகழ்வுகளும் இடம்பெற உள்ளன. (இ-51)

## குண்டு வெடிப்பு

மட்டக்களப்பு கல்குடா தென்னந்தோப்பு ஒன்றில் நேற்றுப் பிற்பகல் இடம் பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்றில் எட்டுச் சிறுவர்கள் காயமடைந்தனர்.

விறகு பொறுக்கச் சென்ற இந்தச் சிறுவர்கள் தோட்டத்தில் காணப்பட்ட பொருள் ஒன்றை எடுத்துத் தட்டிப் பார்த்தபோது அது வெடித்து சிதறியதாகத் தெரிய வருகிறது. (இ-21)

## மனித உரிமைகள்...

(முதலாம் பக்கத் தொடர்)

இதில் பங்கு பற்றுவர்.

புளொட் அமைப்பு யாழ். அலுவலகம் ஏற்பாடு செய்துள்ள சுலோக அட்டைப் போராட்டம் யாழ். மத்திய பஸ் நிலையத்தில் காலை முதல் மாலை வரை நடைபெறும். புளொட் அமைப்பு உறுப்பினர்களும், பொது அமைப்பு பிரதிநிதிகளும் இதில் பங்குபற்றுவர்.

யாழ். மாவட்ட மனிதநேய அமைப்புக்களின் இணையத்தினால் கறுப்புப் பட்டிப் போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இன்று காலை 9 மணிக்கு யாழ். கைதானோர், காணாமல் போனோர் சங்க அலுவலகத்தில் ஒன்று சேரவுள்ள 17 மனித நேய அமைப்புக்களின் உறுப்பினர்கள் கறுப்புப்பட்டி அணிந்து பிரார்த்தனையில் ஈடுபடுவர்.

கைதானோரின் விடுதலைக்காக நீராவியடி சிவகுருநாதர் வீதியிலுள்ள மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்தில் விசேட அபிஷேகமும் கணபதி ஹோமமும் நடத்துவதற்கும், கோயில் வீதியிலுள்ள அருள் ஆச்சிரமத்தில் காலை 6.30 மணிக்கு கிறிஸ்தவ வழிபாடுகள் நடத்துவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இன்றைய தினத்தில் செம்மணிப் புதைகுழி மற்றும் காணாமல்போனோர் விடயத்தில் அரசின் அக்கறையின்மைக்கு எதிர்ப்பு தெரிவித்து பாடசாலைகள், பல்கலைக்கழகம், அரச மற்றும் தனியார் நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்களில் கடமையாற்றுவோர் கறுப்பு பட்டிகளை அணிந்து செல்லுமாறு மனித நேய அமைப்புக்களின் இணையம் கோரிக்கை விடுத்துள்ளது.

மனித உரிமைகள் தொடர்பான தமிழ் மக்களின் ஆதங்கத்தை வெளிப்படுத்தி ஐ.நா. செயலாளர் நாயகம், ஐ.நா. மனித உரிமைகள் குழு மற்றும் கொழும்பிலுள்ள வெளிநாட்டு தூதரகங்கள் ஆகியவற்றுக்கு யாழ். மாவட்ட மனிதநேய அமைப்புக்களின் இணையத்தினால் மகஜர்கள் அனுப்பிவைக்கப்படவுள்ளன.

கறுப்பு பட்டி போராட்டத்தின் இறுதியில் யாழ்ப்பாணத்திலுள்ள அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம், செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அலுவலகத்துக்கு நேரில் சென்று மனித நேய அமைப்புக்களினால் மகஜர்கள் கையளிக்கப்படவுள்ளன.

### கிழக்கில்

திருகோணமலையில் ரெலோ அமைப்பின் ஏற்பாட்டில் இன்று காலை 6 மணி முதல் உண்ணாவிரதப் போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இன்றைய தினத்தை எதிர்ப்பு தினமாக ரெலோ பிரகடனம் செய்துள்ளது.

புளொட் அமைப்பின் ஏற்பாட்டில் திருகோணமலை, மட்டக்களப்பு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் சுலோக அட்டைப் போராட்டம் ஏற்பாடாகியுள்ளது.

மட்டக்களப்பில் காந்தி சிலை முன்பாக மகளிர் அமைப்புக்களின் பிரதிநிதிகள் பிக்கெட்டிங் போராட்டம் நடத்தவிருக்கின்றனர்.

கொழும்பிலும் மனித உரிமைகள் அமைப்புக்கள் இன்றுஎதிர்ப்புப்போராட்டங்களை ஏற்பாடு செய்துள்ளன. (இ-3-5-15-139-173)

## விறகு வெட்டச்...

(முதலாம் பக்கத் தொடர்)

ஆயுதபாணிகளினால் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதாக இச் சம்பவத்தில் தப்பிய நபரொருவர் வாழைச்சேனை பொலீஸில் தெரிவித்துள்ளார்.

காயமடைந்துள்ள மேற்படி நபர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-21)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

10 - 12 - 1998



சேவைக்காய் **தோற்றம்** 29 — 03 — 1921

ஓய்வுக்காய் **மறைவு** 10 — 11 — 1998

மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும்
மட்டுவில் தெற்கு வளர்மதி சனசமூக நிலைய
ஆரம்பகால உறுப்பினரும்
நிலைய காணி வழங்குநருமான

அமரர்

### முருகேசு வேலுப்பிள்ளை

வளர்மதியின் தொடக்க வழி உறுப்பினரே
நிலைய வளர்ச்சியில்,
இளமைக்கால உணர்வை அள்ளி வழங்கிய வள்ளலே
நீ எங்குதான் சென்றாய்?
பூவுலகில் உன் சேவை போதும் புண்ணியனே!
என்று வஞ்சகமாய் வானுலகோர் வரிந்து
இழுத்தனரோ? இல்லை.
இன்னும் உன்சேவை இங்கேதான் தேவை.
அமரரே, மீண்டும் பிறப்பெடுத்து - நீர்
வளர்மதி மண்ணில் தடம்பதிக்க
இறைவனை இறைஞ்சி நிற்கின்றோம்!

நிர்வாகம்,
வளர்மதி சனசமூக நிலையம்,
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

(61204)


இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சக மனையில் 10-12-1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org